Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 19, 2022

புதன்கிழமை ஜனவரி 19, 2022 | ஒளி: 07 கதிர்: 209 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## 12 மாணவர்கள் திடீரென மயங்கினர்

திடீரென மயங்கிவிழுந்த மாணவர்கள் 12 பேர் வட்டவளை பிரதேச வைத்தியசாலையில், நேற்று (19) அனுமதிக்கப்பட்டனர் என வட்டவளை பின்னோயா தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் தெரிவித்துள்ளார்.

அந்தப் பாடசாலையில் தரம்-5 இல் கல்வி பயிலும் மாணவர்கள் எழுபேரும் மாணவிகள் ஐவருமே இவ்வாறு, அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள், அவ்வப்போது மயங்கி விழுந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு

# ஆதரவு தாருங்கள்

- தமிழ்த் தரப்பினரிடம் ஜனாதிபதி வேண்டுகோள்
- மக்கள் சார்பான அரசியல் யாப்புக்கு குழு
- காணாமல் போன பிரச்சினை ஒரு தரப்புக்கு உரியதல்ல
- மீதமிருக்கும் காணிகளை விடுவிக்க முடியும்
- எல்.ரீ.ரீ.ஈயினர் சிலருக்கு மன்னிப்பு வழங்கியுள்ளோம்
- கொரோனாவுக்கு ஒரே வழி தடுப்பூசியாகும்
- மனித உரிமைகள் மீறல்களுக்கு உடந்தையாக இருக்கவில்லை
- ஒருவர் மீது ஒருவரை ஏவி விடுவதை நிறுத்துங்கள்
- வல்லரசுகளுக்கிடையிலான மோதல்களில் சிக்கும் தேவை கிடையாது.
- சகல நாடுகளுடனும் நட்புறவைப் பேணுவது கொள்கையாகும்.
- சம்பளம், கொடுப்பனவை குறைக்கவில்லை

அனைத்து சமூகத்தினருக்கும் எத்தகைய பராபட்சமுமின்றி தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவது நல்லிணக்கத்திற்கு அடிப்படையாக அமையும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாகுமெனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அரசியல் கருத்து வேறுபாடுகளை தற்காலிகமாக ஒருபுறம் வைத்து, உங்கள் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நீங்கள் உங்களது ஆதரவினை வழங்க வேண்டுமென வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ச்சி P3



மட்டு. அரசினர் ஆசிரியர் கலாசாலையில்

## ஆசிரிய மாணவர்கள் 10 பேருக்கு கொரோனா

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் கல்வி பயின்றுவரும் இரண்டாம் ஆண்டு ஆசிரிய மாணவர்கள் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

கொழும்பு நகர எல்லைக்குள்

## 2,746 சந்தேகத்துக்குரிய தற்காலிக குடியிருப்பாளர்கள்

### அடையாளங்களை சரிபார்க்கிறது பொலிஸ்

கொழும்பு நகர எல்லையில் 2,746 சந்தேகத்திற்கிடமான தற்காலிக குடியிருப்பாளர்கள் தங்கியிருப்பதாக விசேட நடவடிக்கைகளில் தெரியவந்துள்ளதாகத் தெரிவித்த மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், அவர்களின் அடையாளங்களை பொலிஸார் சரிபார்க்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

500 மில்லியன் அ.டொலர்

## செலுத்தியது இலங்கை




முதிர்ச்சியடைந்த சர்வதேச இறையாண்மை பத்திரங்களுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை மத்திய வங்கி செலுத்தியுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், நேற்று (18) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 500 மில். டொலர் கடன் வழங்குகிறது இந்தியா

பெற்றோலிய உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்காக 500 மில்லியன் டொலர் கடன் வழங்குவதாக இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், நேற்று (18) தெரிவித்தது.

தொடர்ச்சி P2





## ஏ9 வீதியில் கிளி. பொது நூலகம்

### அடிக்கல் நாட்டப்பட்டது

சுப்பிரமணியம் பாஸ்கரன்



கரைச்சி பிரதேச சபையால், ஏ9 வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கிளிநொச்சி பொது நூலகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, நேற்று (18) காலை நடைபெற்றது.

கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.

தொடர்ச்சி P2

## “கடலுக்கு அடியில் புதைக்க போகிறாரோ”



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர், எளிமையான முறையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று (18) ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன்பின்னர், ஜனாதிபதி உரையாற்றினார்.

அந்த உரையில், பல்வேறான விவகாரங்களை ஜனாதிபதி எடுத்தியம்பியிருந்தார். அதில், கடலுக்கு அடியில் அமைக்கப்படும் டிஜிட்டல் கேபிள் முறையும் ஒன்றாகும்.

ஜனாதிபதியின் உரைக்குப் பின்னரான தேநீர் விருந்துபசாரத்தில் ஆளும்-எதிர் தரப்புகளைச் சேர்ந்த சிலர், எவ்விதமான பேதங்களும் இன்றி,

தொடர்ச்சி P2

## இலங்கையரின் தனிநபர் கடன் ரூ.8 இலட்சமாக அதிகரிப்பு




தற்போதைய சூழ்நிலையில் இலங்கையர் ஒருவரின் தனிநபர் கடன் சுமார் 800,000 ரூபாயாக அதிகரித்துள்ளது என்று தெரிவித்த சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, இலங்கை ரூபாயின் தொடர்ச்சியான வீழ்ச்சி மற்றும் டொலரின் விலை அதிகரிப்பு என்பனவற்றை கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை தற்போதைய நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2



பலவீனமான பொருளாதாரத்தில்

## 500 மில். டொலர் செலுத்தியது ஏன்?

### ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

நாட்டின் பொருளாதாரம் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும்போது, முதிர்ச்சியடைந்த இறையாண்மை பத்திரங்களுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தியமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி கேள்வியெழுப்பியது.

தொடர்ச்சி P2

மினி சூறாவளியால்

## 19 குடும்பங்கள் பாதிப்பு

விநிதர்ஷன்

யாழ்ப்பாணம், கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரணவாய் பகுதியில் நேற்று முன்தினம் (19) ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக 19 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்து பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## 12 மாணவர்கள் திடீரென மயங்கினர்

திடீரென மயங்கிவிழுந்த மாணவர்கள் 12 பேர் வட்டவளை பிரதேச வைத்தியசாலையில், நேற்று (19) அனுமதிக்கப்பட்டனர் என வட்டவளை பின்னோயா தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் தெரிவித்துள்ளார்.

அந்தப் பாடசாலையில் தரம்-5 இல் கல்விப்பயிலும் மாணவர்கள் எழுபேரும் மாணவிகள் ஐவருமே இவ்வாறு, அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள், அவ்வப்போது மயங்கி விழுந்துள்ளனர்.

அதனையடுத்தே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அதிபர் தெரிவித்துள்ளார்.

கடுமையான வெயில் காரணமாக மாணவர்கள் மயங்கி விழுந்திருக்காலம் எனத் தெரிவித்த அதிபர், வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்ட 12 பேரில், எட்டுப்பேர் சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டு வீடுத்திரும்பியுள்ளனர்.

## ஆசிரிய மாணவர்கள் 10 பேருக்கு கொரோனா



அங்கு 202 பேருக்கு, நேற்று (18) மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி கண்டறியப்பட்டு, அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என ஆசிரியர் கலாசாலை அதிபர் எம்.பி.யுனைட் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று பரவல் காரணமாக 2020ஆம் ஆண்டு விடுமுறையில் சென்ற ஆசிரிய மாணவர்கள் தொடர்ந்து விடுமுறையில் சூம் தொழில்நுட்பம் மூலம் கல்வி கற்று வந்தனர்.

இந்நிலையில், சுமார் ஒன்றரை வருடங்களுக்கு பின்னர் மீண்டும் ஆசிரியர் கலாச்சாலை நேற்றுத் திறக்கப்பட்டதையடுத்து, அங்கு கல்வி பயின்றுவரும் 202 இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 5 பேருக்கும் அம்பாறை மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 5 பேர் உட்பட 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 2,746 சந்தேகத்துக்குரிய தற்காலிக குடியிருப்பாளர்கள்

கொழும்பிலுள்ள வீடுகள், வணிக வளாகங்கள், நிறுவனங்கள், அரச அல்லது தனியார் வளாகங்கள், கட்டுமான வேலைத்தளங்கள் போன்றவற்றில் வசிக்கும் அனைத்து தற்காலிக குடியிருப்பாளர்களின் தகவல் சேகரிப்பதற்காக மேல் மாகாண சமூகப் பொலிஸ் பிரிவு ஜனவரி 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மூன்று நாள் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் கொழும்பில் குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி, குடியிருப்போர் மற்றும் நிறுவனங்களின் தகவல்களை சேகரிக்க 600க்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது மேல்மாகாணத்துக்கு வெளியில் இருந்து தற்போது கொழும்பு நகரில் வசிக்கும் 106,126 தற்காலிக குடியிருப்பாளர்களின் தகவல்களை அதிகாரிகள் சேகரித்ததாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

வீடுகள், வணிக வளாகங்கள், நிறுவனங்கள், அரச அல்லது தனியார் வளாகங்கள் மற்றும் கட்டுமான தளங்கள் போன்ற 26,747 இடங்களில் தகவல்களை அதிகாரிகள் சேகரித்தனர்.

2,746 குடியிருப்பாளர்கள், 1,852 ஆண்கள் மற்றும் 894 பெண்கள், துல்லியமான தகவல்களை வழங்கத் தவறிவிட்டனர்.

சந்தேகத்துக்கிடமான தற்காலிக குடியிருப்பாளர்களின் அடையாளங்களை அந்தந்த பிரதேச பொலிஸ் நிலையங்களிலுள்ளஅதிகாரிகள் மீண்டும் சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

## ஏ9 வீதியில் கிளி. பொது நூலகம்

இந்தியத் துணை உயர்ஸ்தானிகர் ராம ராஜேஸ், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

கிளிநொச்சி,பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற விசேட வழிபாட்டைத் தொடர்ந்து, கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து விழா இடம்பெறும் மண்டபத்துக்கு அதிதிகள் அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் இடம்பெற்று, கிளிநொச்சி பொது நூலகத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.






## இலங்கையரின் தனிநபர் கடன் ரூ.8 இலட்சமாக அதிகரிப்பு

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர் அமரவீர, மேற்குறிப்பிட்ட விடயங்களைத் தெரிவித்ததுடன், மேலும் தெரிவித்தாவது,

நாடு அனைத்து துறைகளிலும் சவால்களை எதிர்நோக்கி வருவதாகவும் நாட்டின் வெளிநாட்டுக் கடன் ரூ.17.2 ட்ரில்லியனாக உள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

**“1970 ஆம் ஆண்டு அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 9 ரூபாயாகவும் 1977 ஆம் ஆண்டளவில் 7 ரூபாயாகவும் காணபபட்டது. 1977 ஆம் ஆண்டு முதல் அனைத்து அரச தலைவர்களாலும் அரசாங்கங்களாலும் வெளிநாட்டுக் கடனைக் குறைக்க முடியவில்லை**

1970 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க பதவியேற்ற போது அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 9 ரூபாயாகக் காணப்பட்டதாகவும், 1977 ஆம் ஆண்டளவில் அதன் பெறுமதி 7 ரூபாயாக குறைவடைந்ததாகவும் அமைச்சர் அமரவீர சுட்டிக்காட்டினார்.

1977 ஆம் ஆண்டு முதல் அனைத்து அரச தலைவர்களாலும் அரசாங்கங்களாலும் வெளிநாட்டுக் கடனைக் குறைக்க முடியவில்லை என கூறினார். அமெரிக்க டொலரொன்றின் மதிப்பு ரூ.200 முதல் 240 வரை உள்ளதால், நாட்டின் டொலர் கையிருப்பு வேகமாக குறைந்துள்ளது என்றும் இந்த நிலை எதிர்காலத்திலும் தொடரலாம் என்றும் மேலும் தெரிவித்தார்.

## செலுத்தியது இலங்கை

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி முதிர்ச்சியடையும் சர்வதேச இறையாண்மை பத்திரங்களுக்கே பணம் செலுத்தப்பட்டுள்ளதாக தனது டுவிட்டர் பதிவின் மூலம் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த விடயம், குறிப்பாக இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு குறைவடைந்ததன் காரணமாக அண்மைய வாரங்களில் பெரிதும் விவாதிக்கப்பட்ட ஒரு தலைப்பாக இருந்தது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வகையில் கடன்களை மறுசீரமைக்குமாறு பல தரப்பினர் அதிகாரிகளிடம் கோரிய அதே வேளையில் அரசாங்கம் தனது கடன் உறுதியை செலுத்தத் தவறிவிடும் என்று சில பிரிவுகள் கவலை தெரிவித்தன.

இதேவேளை, அரசாங்கத்தின் கடன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று ஆளுநர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம், இலங்கையின் இறக்குமதிகள் 2020 இல் 16.1 பில்லியன் டொலர்களாகவும் 2019 இல் 19.9 பில்லியன் டொலர்களாகவும் இருந்தன. 2021 இல் 21.6 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



## “கடலுக்கு அடியில் புதைக்க போகிறாரோ”



பல்வேறான விடயங்கள் தொடர்பில் சகஜமாக அளவளாவிக்கொண்டனர்.

இந்நிலையில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுடன் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அளவளாவியுள்ளார்.

இதுதொடர்பில் மனோ கணேசன் தனது டுவிட்டர் பதிவில்,

ஜனாதிபதி இனப்பிரச்சினையை பற்றி ஒன்றும் கூறாமல், கடலுக்கு அடியில் அமைக்கும் டிஜிட்டல் கேபிள்களை பற்றி அதிகம் பேசினார். “உங்கள் இனப்பிரச்சினையையும் கடலுக்கு அடியில் புதைக்க போகிறாரோ” கேலியாக தெரிவித்தார் என அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 500 மில். டொலர் கடன் வழங்குகிறது இந்தியா

நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவுக்கும் இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கருக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை (15) இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த மெய்நிகர் கலந்துரையாடலில், அத்தியாவசிய பொருட்களுக்கான 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதி மற்றும் எரிபொருள் வாங்குவதற்கு குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

எரிசக்தி பாதுகாப்புக்கு பங்களிக்கும் திருகோணமலை எண்ணெய் தாங்கி ஒப்பந்தத்தின் முன்னேற்றத்தையும் இந்தியா வரவேற்றது.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவும் இந்தியாவின் திட்டங்கள் மற்றும் முதலீட்டுத் திட்டங்கள் குறித்தும் நிதியமைச்சர் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் பரிசீலித்தமை குறிப்பிடத்தக்கது.





500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் கடிதம் வழங்குவது

## 500 மில். டொலர் செலுத்தியது ஏன்?

கொழும்பில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, இந்தக் கேள்வியை எழுப்பினார்.

மத்திய வங்கியின் ஆளுநர் பிணைப் பத்திரங்களை செலுத்துவதன் மூலம் தேவையற்ற அனுகூலங்களை பெறுகின்றாரா என்பதில் நியாயமான சந்தேகம் இருப்பதாக தெரிவித்தார்.

இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்து, எரிவாயு, எரிபொருள் மற்றும் நிலக்கரி என்பவை இல்லை எனவும், நாட்டில் பஞ்சம் வரவுள்ளதாகவும், நாடு பொருளாதார சரிவு நிலையை நோக்கி சென்றுகொண்டிருப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இத்தகைய நெருக்கடிக்கு மத்தியில், இறையாண்மைப் பத்திரங்களைச் செலுத்துவதில் ஆளுநர் பெரும் முன்னேற்றம் கண்டதாக கூறினார். அத்தகைய முயற்சிகள் இருந்தபோதிலும், தரமதிப்பீட்டு முகவர் நிலையங்கள் இலங்கையை தொடர்ந்து தாழ்த்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## எரிபொருள் கோரிக்கையை நிராகரித்தது ஐஓசி

### சபுகஸ்கந்த, களனிதிஸ்ஸ மின் நிலையங்களில் நெருக்கடி

மின்சக்தி அமைச்சர் காமினி லொகுகேவின் எரிபொருள் கோரிக்கையை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் (ஐஓசி) நிராகரித்துள்ளது என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொகே, நேற்று (18) தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபைக்கு எரிபொருள் வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையையே அந்நிறுவனம் நிராகரித்துள்ளது.

சப்புகஸ்கந்த அனல்மின் நிலையத்தில் உள்ள இரண்டு மின் பிறப்பாக்கிகளில் ஒன்று உலை எண்ணெய் பற்றாக்குறையால் நேற்று நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்தது.

இதேவேளை, மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளை வழங்காவிட்டால் மின்துண்டிப்பைத் தவிர்க்க முடியாது என இலங்கை மின்சார பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் மின்சார தேவையில் 70 சதவீதமான உற்பத்தி அனல் மின்நிலையங்கள் ஊடாகவே பூர்த்தி செய்யப்படுவதாக அந்த சங்கத்தின் செயலாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவித்துள்ளார்.

22 சதவீத மின்சாரம் நீர் மின் உற்பத்தி ஊடாக இடம்பெறுவதுடன், ஏனைய சகல மின் உற்பத்தி நிலையங்களும் டீசல் மூலமே இயங்குகின்றன.

களணிதிஸ்ஸயில் உள்ள ஒரு மின் பிறப்பாக்கியால் மாத்திரம் டீசலுக்கு மேலதிகமாக, நெப்டாவை பயன்படுத்தி இயக்க முடியும் என்றும் நெப்டா தற்போது முழுமையாக தீர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர், 3,000 மெகாவோட் மின்சாரத்தை, வழங்க முடியாத நிலை ஏற்படும் எனவும் இதுவொரு பாரிய எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை 5 மணி வரை மாத்திரமே மின் உற்பத்தி நிலையங்கள் இயங்குவதற்குத் தேவையான டீசல் கையிருப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக பிற்பகல் 4 மணி முதல் இரவு 10 மணிவரை சுமார் ஒன்றரை மணிநேர மின்சார துண்டிப்பை அமல்படுத்த நேரிடும் என மின்சார பொறியியலாளர் சங்கத்தின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புதிய பொதுமுகாமையாளருக்கு எதிர்ப்பு தெரிவித்து மின்சார பொறியியலாளர்கள் சங்கம் நேற்று காலை முதல் சுகவீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அபுதாபி தாக்குதலுக்கு இலங்கை கண்டனம்

ஐக்கிய அரபு அமீரகத்தில் பொதுமக்கள் தலத்தின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் விளைவாக பல பொதுமக்கள் கொல்லப்பட்டதை இலங்கை அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று (18) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், ஐக்கிய அரபு அமீரகத்தின் மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளது.

உலகளாவிய சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கு தீங்கு விளைவிக்கும் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக தொடர்ந்தும் விழிப்புடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கை மீண்டும் வலியுறுத்துகின்றது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரான அபுதாபியிலுள்ள புதிய சர்வதேச விமான நிலையத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் இரண்டு இந்தியர்கள், ஒரு பாகிஸ்தானியர் உள்ளிட்ட மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன், ஆறுபேர் காயமடைந்திருந்தனர்.

நேற்று முன்தினம் (17) எரிபொருள் ஏற்றிச் சென்ற மூன்று பவுஸர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் புதிதாக கட்டுமான பணி நடைபெற்று வரும் பகுதியிலுள்ள தளத்தில் தீப்பரவல் ஏற்பட்டது.

எமனின் ஈரானுடன் இணைந்த ஹவுதி இயக்கம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மீது தாக்குதல் நடத்தியதாக உரிமை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மினி சூறாவளியால்

## 19 குடும்பங்கள் பாதிப்பு

கரணவாய் பகுதியின் ஜே 348 மற்றும் ஜே 350 பிரிவுகளிலேயே இந்தச் சேத விவரங்கள் பதிவாகியுள்ள அதேவேளை, 15 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் திடீரென பெய்த மழை காரணமாக 119.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

PAGE 1 தொடர்ச்சிகள்

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு

# ஆதரவைத் தாருங்கள்



பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நீங்கள் அனைவரும் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்பு கூற வேண்டிய மிகவும் விசேடமான ஓர் குழுவினராவீர்கள். உங்களைப் போன்று சனநாயக வழிமுறையினூடாக மக்களின் ஆணையைப் பெற்று சனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள நானும் நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளேன். தேர்தலில் எனக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்ல, வாக்களிக்காத மக்கள் தொடர்பாகவும் பொறுப்பு கூறும் கடமை எனக்கு உள்ளது" என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை நேற்று (18) ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்திலும் அதன் வெளியிலும் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் தனது பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றி, நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களிலிருந்து வெற்றி பெறுவதற்கு தனக்கு உதவுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

உரையின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது: கொவிட்-19 தொற்று நோயால், அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து வரும் அனைத்து நாடுகளும் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கின. இலங்கையை அது கடுமையாகப் பாதித்தது. நாட்டை பல தடவைகள் முடக்க நிலைக்கு கொண்டு வருவதற்கும் நேர்ந்தது. இதனால் நாட்டின் பொருளாதார செயற்பாடுகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

இத்தொற்றால் வருமானங்களை இழந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் கடன் மீள் செலுத்தலை பிற்போடுவதற்கும் நடவடிக்கை எடுத்தோம். குறைக்கப்பட்ட எந்தவொரு வரியையும் மீண்டும் அதிகரிக்கவில்லை. அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவு எவற்றையும் நாங்கள் குறைக்கவில்லை.

இத் தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரேயொரு வழி தடுப்பு ஊசியாகும். பாரிய செலவுகளை மேற்கொண்டு நாட்டுக்குத் தேவையான தடுப்பூசிகளைப் பெற்று 16 வயதுக்கு மேற்பட்டோருக்கு வழங்கினோம். உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் திருப்திகரமான நிலையில் உள்ளோம். மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியையும் வழங்கி வருகின்றோம்.

சர்வதேச சட்டதிட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பவற்றை மதிக்கும் ஒரு நாடாக விளங்குகின்றோம். மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் எடுத்துச் செல்லப்பட்ட தவறான கருத்துகளை சீர்செய்யும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது. எனது ஆட்சிக் காலத்தில் எந்தவொரு விதத்திலும் மனித உரிமை மீறல்களுக்கு எமது அரசு உடந்தையாக இருக்கவில்லை. அதேபோன்று எதிர்காலத்திலும் அவ்வாறான நிலைமைகள் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் அங்கிகரிப்பதும் இல்லை.

யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையை வழமை நிலைமைக்கு கொண்டு வருவதற்கு பாரிய முதலீடுகளைச் செய்துள்ளோம். யுத்த காலத்தில், வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரின் பயன்பாட்டிற்காக கையேற்கப்பட்டிருந்த காணிகளில் 90 சத வீதமானவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை நான் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது ஆரம்பித்திருந்தேன். அப்பிரதேசங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி அமைதியான சூழலொன்றை ஏற்படுத்த எம்மால் முடிந்துள்ளதனால் எதிர்வரும் நாள்களில் மீதியாகவுள்ள காணிகளையும் விடுவிக்க இயலும்.

யுத்தத்தால் காணாமற் போனவர்கள் தொடர்பான பிரச்சினை ஒரு தரப்பினருக்கு மாத்திரம் பொதுவானதல்ல. அனைவருக்கும் எம்மால் முடிந்தளவில் நீதி, நியாயம் வழங்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். நாங்கள் இனவாதத்தை நிராகரிக்கின்றோம். நாட்டில் வாழும் அனைத்து பிரசைகளும் கௌரவத்துடன் வாழ்வதற்கும் அவர்களது அனைத்து உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதனால் குறுகிய அரசியல் நோக்கங்கள் அடிப்படையில் மக்களை ஒருவர் மீது ஒருவரை ஏவி விடுவதை தற்போதாவது நிறுத்துமாறு, அவ்வாறான அரசியல்வாதிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நீண்டகாலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர் சிலருக்கு மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய நான் கடந்த நாள்களில் நடவடிக்கை எடுத்திருந்தேன். அதேபோன்று 1978 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையிலிருக்கும் பயங்கரவாதத்தைத் தடுக்கும் வகையில் அதற்கான திருத்தங்களை கொண்டு வர நாங்கள் தயாராகவிருக்கின்றோம்.

நாட்டின் இறைமை, தேசிய பாதுகாப்பு என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கும் அதேவேளை சர்வதேச சமூகத்தினரால் முன்வைக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பாக நியாயமான பிரதிபலிப்புகளை முன்வைப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

நாங்கள் சுதந்திரமான தன்னாதிக்கமுள்ள ஒரு நாடாகும். வல்லரசுகளுக்கிடையிலான மோதல்களில் சிக்குவதற்கு எமக்கு எத்தகைய தேவையும் கிடையாது. நாங்கள் எமது அயலவர்களை கௌரவிப்பதுடன், அனைத்து நாடுகளுடனும் நட்புறவைப் பேணுவது எமது கொள்கையாகும்.

யுத்தத்தினால் நீண்ட காலம் பாதிக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மக்களுக்கு பொருளாதார பாதுகாப்பே முக்கிய தேவையாகவுள்ளது. சிறுவர்களுக்கு சிறந்த கல்வி, இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகள், சுய தொழில்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்புகள், மக்களுக்கு சுத்தமான குடிநீர், விவசாய நடவடிக்கைகளுக்கான நீர்ப்பாசன வசதிகள், வாழ்வதற்குத் தேவையான வீடுகள், வைத்தியசாலைகள், நெடுஞ்சாலைகள் உட்பட மேலும் பல அடிப்படை வசதிகள் அவர்களுக்குத் தேவையாகவிருந்தது. அனைத்து சமூகத்தினருக்கும் எத்தகைய பராபட்சமுமின்றி தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவது நல்லிணக்கத்திற்கு அடிப்படையாக அமையும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாகும்.

இதனால் இந்தப் பாராளுமன்றத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள மக்களின் பிரதிநிதிகளிடம் நான் ஒரு வேண்டுகோளை விடுகின்றேன். பல்வேறுபட்ட அரசியல் கருத்து வேறுபாடுகளை தற்காலிகமாக ஒருபுறம் வைத்து, உங்கள் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நீங்கள் உங்களது ஆதரவை வழங்க வேண்டும். காலம் கடந்த சட்டதிட்டங்களை இற்றைப்படுத்துவதற்கும், டிஜிட்டல் மயமாக்கும் நிறுவனங்களுக்கு இடையிலான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும், ஐந்தாண்டு திட்டத்தினூடாக பல விசேட மாற்றங்களைச் செய்துள்ளோம்.

குற்றவியல் கட்டளைச் சட்டம், சிவில் வழக்குகள் தொடர்பான கட்டளைச் சட்டம், வர்த்தக கட்டளைச் சட்டம் ஆகிய துறைகளில் மிகவும் பரந்தளவிலான மறுசீரமைப்புகளை மேற்கொள்வதன் ஊடாக இதுவரை 98 ற்கும் அதிகமான சட்டதிட்டங்களில் தேவையான திருத்தங்களைச் செய்துள்ளோம்.

1994 ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் புதிய அரசியல் யாப்பொன்றை அறிமுகப்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்தாலும் அவை எதுவும் வெற்றியளிக்கவில்லை. எனவே, இந்த விடயம் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து விரிவான முறையில் மக்களின் கருத்தைப் பெற்று மக்கள் சார்பான அரசியல் யாப்பொன்றை உருவாக்குவதற்கான அரசியல் யாப்பைத் தயாரிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதியுடன் அரசியல் யாப்பு உருவாக்கத்திற்கான ஆலோசனை குழுவொன்றை நியமித்துள்ளேன். இந்தக் குழுவின் முன்மொழிவுகள் அமைச்சரவையில் விரிவாக கலந்துரையாடப்படுவதற்கும் பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கும் நான் எதிர்பார்க்கின்றேன்.

நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறது. சுற்றுலா பயணிகள் மீண்டும் வருகிறார்கள். ஏற்றுமதித் துறையில் தெளிவான வளர்ச்சி காணப்படுகின்றது. ஆனால் மேலும் பல சவால்களை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவற்றைக் வெற்றிகொள்வதற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வை வழங்குவது அவசியமாகவுள்ளது.

கடந்த காலத்தில் இந்த நாட்டிற்கு எத்தனோல் இறக்குமதி செய்வது தொடர்பாக பெரும் எதிர்ப்பு நிலவியது. நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் எத்தனோல் இறக்குமதியை முற்றிலும் தடை செய்தோம். அதன் காரணமாக இன்று சீனி உற்பத்தி ஆலைகள் லாபம் ஈட்டி வருகின்றன. அதேபோன்று கரும்பு விவசாயிகளுக்கும் நல்ல வருமானம் கிடைக்கின்றது.

ஆனால், பசுமை விவசாயம் தொடர்பான நமது அரசின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை. எனவே, குறைபாடுகளை நிவர்த்தி செய்து இக்கொள்கைகளை மிகவும் பயனுள்ள வகையில் முன்னோக்கி கொண்டு செல்ல நாம் எதிர்பார்க்கின்றோம்.

மன்னார் மாவட்டத்திற்கு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் வழங்கும் பஹல மல்வத்து ஓயா நீர்த்தேக்கத் திட்டம், வடமேல் மாகாணத்திற்கு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் வழங்கும் வயம்ப மகாஎல கால்வாய் திட்டம், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மற்றும் மஹாஓயா பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீரை வழங்கும் முந்தேணி ஆறு திட்டம்

யாழ். குடாநாட்டில் நிலவும் நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் பிரச்சினைக்கு நிலையான தீர்வாக 'யாழ்ப்பாணத்துக்கு ஓர் நதி' திட்டத்தின் கீழ் புதிய நன்னீர் தடாகங்களை அபிவிருத்தி செய்தல். 2019 ஆம் ஆண்டு நான் நாட்டைப் பொறுப்பேற்ற போது, நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 7.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே. அதன் ஒரு பகுதி குறுகிய கால கடன்களாகும். எதிர்காலத்தில், வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கும்போதுமின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்க எதிர்பார்க்கின்றோம். அதன்படி, வாகனங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் இயன்றளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை பயன்படுத்த திட்டமிட வேண்டும்.

தற்போது இந்நாட்டில் வசிக்கும் மக்களைப் போன்று எதிர்காலத்தில் வசிக்கவுள்ள மக்களுக்கும் உரித்தானதாகும். நாங்கள் இந்நாட்டின் தற்கால பாதுகாவலர்கள் மட்டுமே. நாங்கள் இன்று செயற்படும் விதத்தில் தான் இந்நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஆகையால் நாங்கள் எல்லோரும் எதிர்கால சந்ததியினருக்கு பொறுப்பு கூற வேண்டும் என்றார்.

தேவாலய வளாகத்தில்

# பழைமையான புதைகுழி கண்டுபிடிப்பு

■ ஜூட் சமந்த

வென்னப்புவ-போலவத்த பிரதேசத்திலுள்ள பரலோக ராஜ்ய தேவாலய வளாகத்திலிருந்து மிகவும் பழைமையான மயானம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த தேவாலய வளாகத்தில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த கட்டடமொன்றுக்காக, அத்திவாரம் வெட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதே, இந்த மயானம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



நிலத்திலிருந்து 3 அடி ஆழத்தில், கொன்கிறீட்டுகளால் தயாரிக்கப்பட்ட சவக்குழியில், ஒருவருடைய சடலம் புகைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தேவாலயத்தின் பங்கு தந்தைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேவாலய வளாகத்தில் இறந்தவர்களின் சடலங்களை புதைப்பது சாதாரண விடயம் என்றாலும் இதற்காக தேவாலய வளாகத்தில் தனியான இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த தேவாலய வளாகத்தில் இவ்வாறு எவரும் தமக்குத் தெரிந்த வரையில் புதைக்கப்படவில்லை என தெரிவித்துள்ள பிரதேசவாசிகள், இது மிகவும் பழைமையான புதைகுழியாக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பான ஆராயுமாறு, தேவாலய பங்குத் தந்தையால் தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஞாயிறன்று 'பாடுவோர் பாடலாம்'

இலைமறைக் காயாய் ஒளிந்திருக்கும் புதிய பாடகர், பாடகிகளை இனம் கண்டு, அவர்களுக்கு ஓர் இசைமேடை ஏற்படுத்திக் கொடுக்கும் உயரிய எண்ணத்தில், கலை ஶ்ரீ கலை மன்றத்தின் ஏற்பாட்டில் கவியும் கலையும் இணைந்து வழங்கும் 'பாடுவோர் பாடலாம்' இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இசை நிகழ்ச்சி, கொழும்பு, ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள புதிய நகர மண்டபத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி மாலை 5மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு, இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் தலைமை தாங்க, முன்னிலை அதிதியாக வண. சந்ரு பெர்ன்னாடோ, பிரதம அதிதியாக தயான் லங்கா அதிபர் கேசவன் பத்மநாதன், சிறப்பு அதியாக உலக புகழ்பெற்ற அறிவிப்பாளர் பீ. எச். அப்துல் ஹமீது ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கவிஞர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், பிரபலங்களும் வருகைதர விருப்பதோடு, அனுமதி இலவசமாகும். சுகாதார முறைப்படி இந்நிகழ்ச்சி நடக்கவிருப்பதால் இது தொடர்பான மேலதிக தகவல்களை கவிக்கமல் 0775745172அல்லது கலை ஶ்ரீ 0779675749 ஆகியோருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

பரீட்சை நிலையங்களாக மாற்றப்படவுள்ள

# மாவட்ட வைத்தியசாலைகள்

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வைத்தியசாலைகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பல நாள்களாக நடைபெறும் பரீட்சை என்பதால், அதற்கென தனியான வைத்தியசாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் எனவும் அந்த வைத்தியசாலை பரீட்சை நிலையமாக செயற்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.





# ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பொருட்கள் மற்றும் சேவை வரிக்கு எதிராக உள்நாட்டு இறைவரி திணைக்கள ஊழியர்கள் நேற்று (18) நிதியமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(படம்: பிரதீப் பத்திரண)

# 'மாத்திரம்' ஒதுக்கினால் கடுமையான நடவடிக்கை

இலங்கையிலுள்ள சில சுற்றுலா நிறுவனங்கள் 'வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம்' என ஒதுக்கி சேவைகளை முன்னெடுப்பதாகவும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. சில சுற்றுலா சேவை நிறுவனங்கள் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைத் தவிர்த்து, வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம் சேவையை வழங்கி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் சுற்றுலா அதிகார சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை சுற்றுலா அதிகார சபை, இனம், மதம், மொழி, பால் போன்ற காரணங்களை அடிப்படையாக வைத்து, சமத்துவமின்மையுடன் எவரையும் நடத்த முடியாது என தெரிவித்துள்ளது. எனவே வெளிநாட்டினருக்கு மாத்திரம் என தெரிவித்து சேவைகளை முன்னெடுப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறும் அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது.

கொரோனா தொற்றால் இலங்கை சுற்றுலாத்துறை பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ள இக்காலப்பகுதிக்குள் ஹோட்டல் மற்றும் அதனுடன் சார்ந்த தொழிற்றுறையினருக்கு உள்ளூர் சுற்றுலாத்துறையினர் வழங்கிய பங்களிப்பின் காரணமாகவே, சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் அதனுடன் சார்ந்த தொழிற்றுறைகள் ஓரளவு பாதுகாக்கப்பட்டதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

பாராளுமன்றத்தில் நடனமாட வந்த

# கலைஞருக்கு தொற்று

ஒன்பதாவது பாராளுமன்றத்தில் இரண்டாவது கூட்டத்தொடர் நேற்று (18) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் இடம்பெற்ற கலாசார நடன நிகழ்வில் பங்கேற்க வந்த கலைஞர் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர், உடனடியாக திருப்பி அனுப்பப்பட்டார் என்றும் பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், குறித்த கலைஞருக்கு தொற்று உறுதியானதை உறுதிப்படுத்திய பாராளுமன்ற படைகல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ, தொற்றுக்குள்ளான கலைஞர், பாராளுமன்றத்துக்கு வருகைத் தரும் போது ஏனைய கலைஞர்களுடன் அல்லாமல் தனியாகவே வருகைத் தந்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்துக்கு நேற்று (18) அழைக்கப்பட்டிருந்தவர்கள் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதில், சிலருக்கு தொற்று உறுதியானது. அவ்வாறானவர்கள் உடனடியாகவே அங்கிருந்து அனுப்பிவைக்கப்பட்டனர்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (1) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஃபோல்கன் ட ஃபெக்ரீ (பீவீடீ) எல்டீடி**
பீ - வி 00249944
ஃபோல்கன் ட ஃபெக்டா, எலபாத, இரத்தினபுரி.

**கெப்பிடல் குளோபல் ப்ளேஸ்மென்ட் (பீவீடீ) எல்டீடி**
பீ - வி 00250159
இல. 792/3, பன்னிப்பிடிய வீதி, தளவதுகொட.

**டப்ளியூ.ஆர்.எஸ். ஓட்டோ ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி**
பீ - வி 00209792
இல. 76/02, காஹாவத்த வீதி, உடவெலிகெடிய, அகுரன.

**அல் ஹுஃதா இன்டர்நெஷனல் (பீவீடீ) எல்டீடி**
பீ - வி 00249363
இல. 36/38/5, சிறிமல்வத்த வீதி, மடவல பசார், மடவல.

**யுனிக் மெட்டல் கொ (பீவீடீ) எல்டீடி**
பீ - வி 00241308
இல. 71, நீர்கொழும்பு வீதி, வத்தளை

**பணிப்பாளர்கள்**

கிண்ணியா நகர, பிரதேச சபைகளின் தவிசாளர் தெரிவுக்கு

# பலத்த போட்டி

ஹஸ்பர்

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா நகர சபை, பிரதேச சபை ஆகிய இரு சபைகளின் வரவு - செலவுத் திட்டங்கள் தோல்வியடைந்தமையால் புதிய தவிசாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பில் வர்த்தமானி ஊடாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தெரிவித்தார்.

இதனால் குறித்த இரு சபைகளின் புதிய தவிசாளர் தெரிவு, நாளை வியாழக்கிழமை (20) உரிய சபைகளின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இதன்படி, கிண்ணியா நகர சபையின் புதிய தவிசாளர் தெரிவு, காலை 9.30 மணிக்கும் கிண்ணியா பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு, காலை 11 மணிக்கும் இடம்பெறவுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி இரு சபைகளின் தவிசாளர் தெரிவு, மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்




தலைமையில் இடம்பெறவுள்ளன.

சபை உறுப்பினர்களுக்கு இடையில் அதிகாரப் போட்டி நிலவி வரும் நிலையில், யார் அந்தத் தவிசாளர் கதிரையை அலங்கரிக்கப் போகின்றார் என்ற எதிர்பார்ப்பு, கட்சிகளுக்கிடையே பெரும் பரபரப்பை தற்போது ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட காணிப் பிரச்சினைகளுக்கு

# விரைவில் தீர்வு

சுப்ரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு வகையான காணிப் பிரச்சினைகளுக்கும் ஆறு மாதங்களுக்குள் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே, கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா இந்த உறுதிமொழியை வழங்கினார்.

வன வளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு



விடுவிக்கப்படுவதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் தொடர்பாக அங்கு கலந்துரையாடப்பட்டபோது, பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது, அவர் இதனைக் குறிப்பிட்டார்.


வன வள மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்கள் வரன்முறையின்றி காணிகளைக் கையகப்படுத்தி வைத்திருப்பதாகவும், காணிகளை கையகப்படுத்துதல் மற்றும் விடுவித்தல் என்பன தொடர்பான உறுதியான கொள்கைகள் ஏதும் பின்பற்றப்படுவதில்லை என்றும் சுமந்திரன் இங்கு குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த டக்ளஸ் தேவானந்தா, அவ்வாறு ஒரு கொள்கையின்றி செயற்படுவதாகக் குறிப்பிட முடியாது. ஜனாதிபதி, காணியமைச்சர், காணி ஆணையாளர் ஆகியோருடன் கலந்துரையாடி இந்தக் காணிப் பிரச்சினைகளுக்குத் தம்மால் தீர்வு காண முடியும் என்றும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் பெரும்பாலான மக்களிடம் காணி உறுதிகள் கிடையாது; அனுமதிப் பத்திரங்களுடன் மட்டுமே அவர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டிய சிறிதரனுக்குப் பதிலளித்த டக்ளஸ் தேவானந்தா, விரைவில் காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டு, காணி உறுதிகள் மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும் என உறுதியளித்தார்.

# ஏ.எல்.எம்.அமீன் காலமானார்

அஸ்லம் எஸ்.மௌலானா



ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளரும் நிந்தவூர் பிரதேசத்தின் முதலாவது ஊடகவியலாளருமான கலாபூஷணம் ஏ.எல். எம்.அமீன், தனது 77ஆவது வயதில் நேற்று (18) காலமானார்.

கிழக்கிலங்கையின் ஊடகத்துறை முன்னோடியாகத் திகழ்ந்த இவர், 1960 ஆம் ஆண்டு தொடக்கம் வீரகேசரி பத்திரிகையின் பிராந்திய செய்தியாளராக பணியாற்றியிருப்பதுடன் தினபதி, சிந்தாமணி உள்ளிட்ட வேறு சில தேசிய பத்திரிகைகளினதும் செய்தியாளராக செயற்பட்டிருக்கிறார்.

இவர், நிந்தவூர் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளராகவும் நிந்தவூர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினராகவும் நிந்தவூர் வர்த்தகர் சங்கத்தின் செயலாளராகவும் பொறுப்புகளை வகித்து சமூக மற்றும் பிரதேசம் சார்ந்த பல்வேறு பணிகளை முன்னெடுத்திருந்தார்.

வாகன விபத்து;

# கர்ப்பிணியின் வயிற்றில் ஒன்பது மாத சிசு மரணம்

கனகராசா சரவணன்

வாழைச்சேனை - வாகரை பிரதான வீதியிலுள்ள காயங்கேணி பாலத்துக்கு அருகில் ஓட்டோவும் காரும் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணியில் வயிற்றில் இருந்த 9 மாதங்களான சிசு, நேற்று முன்தினம் (17) மரணமடைந்துள்ளது.

இந்த விபத்துக் குறித்துத் தெரியவருவதாவது, "திருகோணமலை, ஈச்சலம்பற்று, பூநகர் பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான சிவானந்தம் சுபாஜினியும் அவரது உறவினர் உட்பட 4 பேர், சனிக்கிழமை (15) பூநகரில் இருந்து பொலன்னறுவை - செவினப்பிட்டியில் உள்ள உறவினர் வீட்டுக்கு ஓட்டோவில் பயணித்துள்ளனர்.

பிற்பகல் 2 மணியளவில், காயங்கேணி பாலத்துக்கு அருகில் பயணித்துக் கொண்டிருக்கையில், ஓட்டோவின் பின் பக்க ரயர் காற்றுப் போனதையடுத்து, பின்னால் வந்த கார் மோதியுள்ளது.

இதில் கர்ப்பிணியும் அவரவது உறவினரும் படுகாயமடைந்த நிலையில், வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, கர்ப்பிணி, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், அவரது வயிற்றில் இருந்த சிசு மரணித்துள்ளதாகவும் சத்திர சிகிச்சை மூலம் சிசுவை வெளியில் எடுத்துள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.



# யாழில் எம்.ஜி.ஆரின் 105வது பிறந்த தினம்

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி. இராமசந்திரனின் (MGR) 105ஆவது பிறந்த தினம், யாழ். எம்.ஜி.ஆரின் சொந்த நிதியில் யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு முன்னால் நேற்று முன்தினம் (17) மாலை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, அண்மையில் இயற்கை எய்திய யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் நினைவாக அவர்களது குடும்பத்தினரால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

எம்.ஜி.இராமசந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமாக விளங்கிய யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஏற்பாட்டில், ஆண்டுதோறும் எம்.ஜி.ஆர் நினைவேந்தல்கள் அனுஷ்டிக்கப்பட்டு வந்த நிலையில், அவர் அண்மையில் இயற்கை எய்தினார்.

அவரின் குடும்பத்தினரால் எம்.ஜி.ஆர் சிலை புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டதுடன், யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கம் மற்றும் எம்.ஜி.இராமச்சந்திரனின் படங்கள் கல்வெட்டுகளாகப் பதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: வி. நிதர்ஷன்)





பாடசாலை மாணவர்களுக்கு

# பைசர் தடுப்பூசி செலுத்தல்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசியான பைசர் செலுத்தும் நடவடிக்கையின் கீழ், மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு நேற்று (18) செலுத்தப்பட்டுள்ளதாக மட்டு. வெட்டுக்காடு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் த.மிதுனன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கமைய, நாடளாவிய ரீதியில் 12 தொடக்கம் 15 வயது வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதனைத் தொடர்ந்து ஏனைய பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு தொடர்ச்சியாக தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடம்பெறும் எனவும் மாணவர்கள் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்புத் தருவதாக சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

யாழ். வைத்தியசாலையில்

# திரவ ஒட்சிசன் கொள்கலன்

என்.ராஜ், வி.நிதர்ஷன்

யாழ். போதனா வைத்தியசாலை ஒட்சிசன் பயன்பாட்டுக்கென 10,000 லீற்றர் கொள்ளளவு உடைய திரவ ஒட்சிசன் கொள்கலன், வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராஜாவால் வைபவ ரீதியாக நேற்று (18) காலை திறந்துவைக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் 24 இலட்சம் ரூபாய் நிதியில், வடக்கு மாகாணத்தில் முதன்முதலாக இந்தத் திரவ ஒட்சிசன் கொள்கலன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

குறித்த திரவ ஒட்சிசன் கொள்கலன் மூலம் வைத்தியசாலையில் நோயாளர் விடுதிகளுக்கு குழாய் வழியாக ஒட்சிசனை எடுத்துச் செல்லக் கூடியதாக



உள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பவானந்தராஜா தெரிவித்தார்.

கடந்த காலங்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒட்சிசன் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு இடர்களை எதிர்நோக்கியதாகவும் எனினும் தற்போது கிடைக்கப் பெற்றுள்ள பலத்தின் மூலம், ஒட்சிசன் தட்டுப்பாடு இல்லாது வைத்தியசாலையில் சிகிச்சை வழங்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழக மீனவர்களின்

# விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

வி.நிதர்ஷன்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 13 பேரின் விளக்கமறியல் பெப்ரவரி 1ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி கைது செய்யப்பட்ட இம்மீனவர்கள், ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் மறுநாளே ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், மூன்றாவது தவணையாக குறித்த வழக்கு, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நேற்று (18) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, 13 மீனவர்களின் விளக்கமறியலை எதிர்வரும் பெப்ரவரி 1ஆம் திகதி வரையில் நீதவான் நீடித்து உத்தரவிட்டார்.

விழிப்புலனற்றோர் அமைப்பின்

# மாகாண காரியாலயம் திறந்துவைப்பு

எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாண விழிப்புலனற்றோர் அமைப்பின் மாகாண காரியாலயத் திறப்பு விழாவும் கௌரவிப்பு வைபவமும் அட்டாளைச்சேனையில் நேற்று முன்தினம் (17) நடைபெற்றது.

விழிப்புலனற்றோர் அமைப்பின் சிரேஷ்ட தலைவர் ஏ.எம். அப்துல் சலாம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம். நளீல், அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைடீன் ஆகியோர் கலந்துகொண்டு, வைபவ ரீதியாகத் திறந்து வைத்தனர்.

அம்பாறை, மட்டக்களப்பு,



திருகோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக இக்காரியாலயம் இயங்குமென தலைவர் ஏ.எம்.அப்துல் சலாம் தெரிவித்தார்.

விழிப்புலனற்றவர்களின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் ஏனைய உரிமைகளையும் சாதாரண நபர்களுக்கு இணையாக பெற்றுக் கொடுக்கக் கூடிய நோக்கத்தின் அடிப்படையில் இவ் அமைப்பானது செயற்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சரால்

# பாலம் திறந்துவைப்பு

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்கட்டிச்சோலையில் இருந்து களுவாஞ்சிக்குடி செல்லும் பிரதான வீதியில் காணப்பட்ட பாலம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் முயற்சியால் 15 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இப்பாலம்புனரமைக்கப்பட்டு, மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சீரற்ற வானிலைகளால் அவ்வப்போது ஏற்படும் வெள்ளப்பெருக்கால் உடைந்து பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இப்பாலம் காணப்பட்டிருந்தது.







நெல் சந்தைப்படுத்தலை மாவட்டத்துக்குள்

# மட்டுப்படுத்துமாறு கவனயீர்ப்பு பேரணி

சுப்பிரமணியம் பாஸ்கரன்

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் நெல் சந்தைப்படுத்தலை மாவட்டத்துக்குள் மட்டுப்படுத்தக் கோரி, கிளிநொச்சியில் நேற்று (18) கவனயீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் சிவில் சமூக வலையமைப்பின் ஏற்பாட்டில் இக்கவனயீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி, டிப்போ சந்தியில் கவனயீர்ப்பில் ஈடுபட்ட பெண்கள், ஏ9 வீதி ஊடாக கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வரை சென்று, அங்கும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் மகஜர் வாசிக்கப்பட்டு, அரசாங்க அதிபரிடம் மகஜரைக் கையளித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், குறித்த நெல்லை வெளி மாவட்டங்களுக்கு சந்தைப்படுத்தாது, மாவட்டத்துக்கு உள்ளேயே சேமிக்க நடவடிக்கை எடுக்குமாறு, பேரணியில் ஈடுபட்டவர்களால் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

நாட்டில் தற்போதுள்ள பொருட்களின் விலை அதிகரிப்பால் மக்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருவதாகவும், அதற்கு ஏற்ற வகையில் அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்களால் வலியுறுத்தப்பட்டது.

### அழிந்து போன சைவப் பண்பாட்டு முறைகள்

# மீளவும் கட்டியெழுப்பப்படும்

■ இக்பால் அலி

மலையத்தில் அழிந்து போன சைவப் பண்பாட்டு முறைகளை மீளவும் கட்டி எழுப்புகின்ற பணிகளை மேற்கொள்ளவுள்ளதாக, உலக சைவ தமிழ் ஒன்றியத்தின் தலைவர் நவரட்ணம் இளங்கோ தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்துள்ள அவர், மொரகஹமுல்ல முருகன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், உலக சைவத் தமிழ் ஒன்றியம் என்பது, இலங்கையில் அழிந்து போன சைவ முறைகளை மீண்டும் உயிர்ப்பிப்பதற்காக தோற்றிவிக்கப்பட்டதாகும். கோவிலைச் சுற்றித்தான் அந்தக் காலத்தில் மக்கள் வாழ்ந்தார்கள். 'கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று கூறுவார்கள். கோவில் உள்ள ஊரில் தான் தமிழ் சமூகம் வாழ்ந்தது. எனவே, எங்களுடைய விடுபட்டுப் போன வழிபாட்டு முறைகளைத் திருப்பி எங்களிடத்தில் கொண்டு வந்தால் மிகப்பெரிய பிரமாண்டமான உயரத்திற்கு கொண்டு செல்ல முடியும்.

மலையத்திலுள்ள கோவில்கள் எல்லாம் மிகச் சிரமத்திற்கு மத்தியிலேயே பராமரித்து வருகின்றார்கள். அவர்களுக்கு பக்தி இருக்கின்றது; எல்லாம் இருந்தும் அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்ய கூடிய ஆட்கள் இல்லை. இதை இப்படியே விட்டால், இனி ஒரு காலமும் மீட்டெடுக்க முடியாது என்றார்.



### ஹட்டன் கல்வி வலய பாடசாலையின்

## மாணவர்கள், ஆசிரியர்கள் 11 பேருக்கு தொற்று

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கினிகத்தேனை பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றின் 8 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் கொரோனா தொற்றுக்குள்ளாகி உள்ளனர்.

இதன் காரணமாக குறித்த பாடசாலையில் தரம் 10, 11ஆம் வகுப்புகளுக்கு தற்காலிகமாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளதுடன், முழுப் பாடசாலையும் கிருமிதொற்று நீக்கி விசிறப்பட்டுள்ளது.

மாணவர்களும் ஆசிரியர்களும் இவ்வாறு தொற்றுக்குள்ளானதால் பாடசாலையில் மாணவர்களின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கமைய, 150 மாணவர்களே நேற்றைய தினம் (18) பாடசாலைக்கு வருகை தந்தனர் என்று அப்பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

"அது மட்டுமன்றி, தொற்றுக்குள்ளான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் நெருங்கிப் பழகிய சுமார் 500 மாணவர்கள், சுயதனிமை படுத்தப்பட்டனர்" என்றும் அதிபர் தெரிவித்தார்.



### நான்கு நாள்களில்

## 1.2 மில்லியன் ரூபாய் வருமானம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

நீண்டதொரு வார இறுதி விடுமுறையுடன் கடந்த 4 நாள்களில் மாத்திரம் ஹட்டன் இ.போ.ச பஸ் டிப்போவுக்கு 1.2 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது என டிப்போவின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே ஹட்டன் பஸ் டிப்போவுக்கு அதிகம் வருமானம் கிடைத்துள்ளது என்றார்.

இதில் அதிகமான பயணிகள் ஹட்டன் ரயில் நிலையத்திலிருந்து நல்லத்தண்ணி வரை இ.போ.ச பஸ்களில் பயணித்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.



## முன்மாதிரி...

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கி, அவர்களை பாடசாலைகளில் சேர்க்கும் நடவடிக்கை, கம்பளை வலய பொலிஸ் அத்தியட்சகர் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி பீரிஸ் தலைமையில் நடைபெற்றது.

கம்பளை பொலிஸ் நிலைய கட்டட தொகுதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர் .( நவி)







### காணாமல் போன இளைஞன்

## மரத்திலிருந்து சடலமாக மீட்பு

■ ராமு தனராஜா

பசறை, ஆக்கரதன்ன பகுதியிலிருந்து கடந்த 6ஆம் திகதி வீட்டிருந்து சென்றிருந்த நிலையில், காணாமல் போயிருந்த 23 வயது இளைஞன் ஒருவர், நேற்று முன்தினம் (17) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவ்விளைஞன் வீடு திரும்பாமை தொடர்பில், அவருடைய தாத்தா, பசறை பொலிஸ் நிலையத்தில் 14ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில், அவரது வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப்பகுதியில் துர்நாற்றம் வீசியுள்ளது. தேடிச்சென்றபோது, மரத்தில் தொங்கிய நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை எனத் தெரிவித்த பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கும்பாபிஷேகம்

■ துவாரகஷான்

நாவலப்பிட்டி, கெட்டபுலா தோட்டம், உச்சிமலை கீழ்ப்பிரிவு ( பார்கேபல் ) அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில், மகா கும்பாபிஷேகப் பெருவிழா அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை வரும் சுபவேளையில் கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு சுன்னாகம் சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீகாந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

மேற்படி கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 3 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, அனுக்ஞை அனுமதி, நந்திக் கொடியேற்றம், புதிய மூர்த்திகள் நகர் வலம் முதலானவற்றோடு மாலை 5 மணிக்கு கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, திசா ஹோமம் இடம்பெறும்.

கும்பாபிஷேகப் பெருவிழாவைத் தொடர்ந்து 48 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும்.

## கிணற்றில் விழுந்து கர்ப்பிணி மரணம்

■ ஆ.ரமேஸ்

நிறைமாத கர்ப்பிணியொருவர், கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சம்பவமானது, இராகலை, சமஹிபுர பகுதியில் நேற்று முன்தினம் (17) மாலை பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தாயான, 34 வயதான காரியவசம் சாந்தினி பிரியதர்சிகா என்பவரே உயிரிழந்துள்ளார் என இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

அடுத்த வாரமளவில் இரண்டாவது பிரசவத்துக்குத் தயாராக இருந்த அவர், தனது வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றுக்குச் சென்று ஆடைகளை கழுவுவதற்காக, தண்ணீர் எடுக்க முற்பட்ட போது வழுக்கி கினற்றுக்குள் விழுந்துள்ளார். கிணற்றுக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை என, வீட்டார் தேடிய போதே, அப்பெண் கிணற்றுக்குள் விழுந்து கிடந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை இராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## செயலமர்வு திருப்தியானது

எதிர்வரும் 22 ஆம் திகதி புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கற்றல் வழிகாட்டல் செயலமர்வானது, ஊவா ஐயப்பா சேவா சங்கத்தின் ஏற்பாட்டில், ஹொப்டன் விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்றது.

ஹொப்டன் கலைமகள் தமிழ் வித்தியாலயம், ஹொப்டன் விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்கள் இச்செயலமர்வில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

வளவாளராக பசறை ஆசிரியர் நடராஜா மலர்வேந்தன், மாணவர்களுக்கு கற்றல் வழிகாட்டலை வழங்கியதோடு, ஊவா ஐயப்பா சேவா சங்கத்தின் தலைவர் ஸ்ரீகுமார் தலைமையில் ஆன்மீக சொற்பொலிவும், கூட்டு இறைபிரார்த்தனையும் இடம்பெற்றன.



### அக்கரப்பத்தனையில் ஒரே நாளில்

## மூன்று கோவில்களில் கொள்ளை

■ துவாரகஷான்

நுவரெலியா, அக்கரப்பத்தனையில் நேற்று முன்தினம் (17) இரவு மூன்று கோவில்களில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அக்கரப்பத்தனை சின்னதோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில், சிலையின் கழுத்தில் இருந்த தங்க நகை மற்றும் உண்டியலை உடைத்து பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பச்சைபங்களா தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் பூட்டை உடைத்து, அங்கிருந்த உண்டியலை உடைத்து பணத்தை கொள்ளையடித்துள்ளதுடன், உருலேக்கர் தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலிலும் இவ்வாறே கொள்ளையிட்டுள்ளனர்.

அக்கரப்பத்தனை நகருக்கு அருகிலுள்ள அடுத்தடுத்த தோட்டங்களில் ஒரே நாளில் இவ்வாறு கொள்ளைச் சம்பவம் நடந்திருப்பது பொதுமக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கோவில் பரிபாலன சபையினர் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைபாடுகளை செய்துள்ளனர்.

இதனையடுத்து அக்கரப்பத்தனை பொலிஸாரும், நுவரெலியா பொலிஸ் குற்ற தடுப்பு பிரிவினரும், கைரேகை பிரிவினரும் சம்பவம் இடம்பெற்ற கோவில்களுக்குச் சென்று, விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### வில்பிரட் டவுனில் 10 குடும்பங்களுக்கு மாத்திரமே காணி

## ஏனையவை சுவீகரிக்கப்படும்

### கே. கே. ரவி தெரிவிப்பு

■ துவாரகஷான்

நோர்வூட் பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் வரும் ஹட்டன், வில்பிரட் டவுனில் குடியிருக்கும், 10 குடும்பங்களுக்கு மாத்திரம் தேவையான காணிகளை ஒதுக்கிக் கொடுத்து விட்டு, ஏனைய காணிகளை நோர்வூட் பிரதேச சபை சுவீகரிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் ரவி குழந்தைவேல் தெரிவித்துள்ளார்.

இதனூடாக காடுகள் மண்டாமல் குடியிருப்பாளர்கள் கவனம் எடுத்துக் கொள்ளும் போது, சிறுத்தைகள் உள்ளிட்ட விலங்குகளின் தொல்லைகள் மற்றும் சுகாதார சீர்கேட்டிலிருந்தும் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபையின் மாதாந்த அமர்வின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நோர்வூட் பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள, 17 கிராம சேவகர் பிரிவுகளில் மொத்தமாக ஒரு இலட்சத்து 4,209 வசிக்கின்றனர். இவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கு மத்தியிலும் எம்மாலான சேவைகளை தடையின்றி வழங்கி வந்துள்ளோம். கடந்த ஆண்டுகளில் குறைவான ஆளணியோடு நிர்வாகத்தைக் கொண்டு சென்ற எம்மால், புதிய ஆண்டில் தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.



மேலும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பிரதிநிதிக்கும் வட்டார அபிவிருத்திக்காக 40 இலட்சம் ரூபாய் வீதம் நிதி கிடைக்கவுள்ளது.

அனைவரும் ஒற்றுமையாக இந்த நிதியை செலவு செய்து, மக்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றார்.

### மாவனெல்ல பிரதேச சபையின் அதிகாரம்

## யானையிடமிருந்து மொட்டு வசமானது

■ என்.ஆராச்சி

மாவனெல்ல பிரதேச சபையின் புதிய பதில் தவிசாளராக கே.ஜீ.பியதாஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பியதாஸ சபையின் உப தவிசாளராக கடமையாற்றி வந்தார்.

இந்த நிலையில், உள்ளூராட்சி மன்றங்களின் சட்டத்துக்கு அமைய, அண்மையில் பிரதேச சபையில் முன்வைக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் யோசனை, இரண்டு தடவைகள் தோல்வியடைந்ததால் சபையின் தவிசாளராக பதவி வகித்த ஐக்கிய தேசிய கட்சியின் சந்தன குமார பதவி விலக்கப்பட்டார். இதனையடுத்து, பதில் தவிசாளராக பியதாஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவையால் இது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விமர்சனங்களுக்கு செவிசாய்க்காவிடின் பாதை பிழைத்துவிடும்

ஒருவரை நல்வழிப்படுத்துவதற்கு பலரும் விமர்சிப்பர்; கூடாத வழியில் திசைதிருப்பி விடுவதற்கும் சிலவேளைகளில் சிலர் வழிகாட்டியும் விடுவர். இவ்விரண்டையும் வகைபிரித்துக் கொண்டோமெனில், சவால்களைத் தகர்த்தெறிந்து முன்னோக்கி பயணித்துக்கொண்டே இருக்கலாம்.

விமர்சனங்களுக்கு அஞ்சி, ஒரமாய் ஒதுங்கிக்கொண்டோமெனில், முன்னோக்கிப் பயணிக்கமுடியாது. அத்துடன், எமது இலக்கையும் எட்டமுடியாது. ஆகையால், எல்லாவற்றையும் செவிமடுத்து, நல்லவற்றை எடுத்துக்கொண்டு, தீயவற்றை புறந்தள்ளிவிடவேண்டும்.

ஒவ்வொருவருடைய அறிவுரைகளையும் கேட்கும் போது, காதுகளுக்கு இனிப்பாகவே இருக்கும். அவற்றைச் செயற்படுத்தினால்தான், நன்மை, தீமை, இலாபம், நட்டம் விளங்கும். அறிவுரைகளைக் கூறுவோரில் சிலர், அவற்றை ஒருபோதுமே பின்பற்றியிருக்கவே மாட்டார்கள். எப்படியென்று பார்ப்போமெனக் கைக்கட்டி வேடிக்கை பார்த்து, சிலரை வைத்துப் பரிசோதித்து விடுவர்.

ஒரு நாட்டில் நல்ல ஆட்சியொன்று நடக்கிறது என்றால், எதிர்க்கட்சி மிக பலம்வாய்ந்ததாக இருக்கவேண்டும். அரசாங்கத்தில் எல்லாச் செயற்பாடுகளையும் எதிர்க்காமல், சிலவற்றுக்கு கட்டாயமாக ஆதரவளிக்கவே வேண்டும். எமது நாட்டைப் பொறுத்தவரையில் தனியொரு கட்சி ஆட்சியமைக்கும் நிலைமை கடந்துவிட்டது.

ஏதாவது சில கட்சிகளுடன் கூட்டணி அமைத்துத்தான் ஆட்சியமைக்க வேண்டும். அதில் பல்வேறான கொள்கைகளைக் கொண்ட பங்காளிகள் இருப்பர். இவற்றையெல்லாம் ஆளும் தரப்பினர் கேட்டே ஆகவேண்டும். பிழையான பாதையில் அரசாங்கம் பயணிக்கிறது என்றால், நல்வழியில் செல்வதற்கு ஆலோசனைகளைக் கூறவேண்டும்.

அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கு கூட்டுப்பொறுப்பு முக்கியமானது. அமைச்சரவைக்குள் விமர்சனங்களை முன்வைத்தாலும், வெளியில் பகிரங்கமாக காண்பித்துவிடக்கூடாது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையால், எவருடைய பதவியும் அதிகாரங்களும் எப்போது வேண்டுமானாலும் பறிக்கப்படலாம்.

எனினும், தவறான பாதையில் அரசாங்கம் பயணிக்கிறதென எதிர்க்கட்சியினர் விமர்சனம் செய்தால், அது அரசியல் விமர்சனமாகக் கருதலாம்; ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இன்றேல் சீர்குலைப்பதற்கு எடுக்கப்பட்ட ஒரு துரும்பாகக்கூட கருதி, கவனத்தில் எடுக்காமல் விட்டுவிடலாம். ஆளும் கட்சியின் பங்காளிகளே விமர்சித்தால், அவைதொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தியே ஆகவேண்டும்.

இந்நிலையில்தான், “அரசாங்கத்தின் தவறுகளை விமர்ச்சிக்கும் அனைவரையும் உடனடியாக நீக்கவேண்டும்” என்று இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த தெரிவித்துள்ளார். இது தவறானது.

அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களுக்கு செவிசாய்க்கவே வேண்டும். ஏற்பதும் புறந்தள்ளிவிடுவதும், ஆட்சியிலிருப்போரின் விருப்பு, வெறுப்புக்கு உட்பட்டதாகும்.

விமர்சனங்களுக்கு செவிசாய்த்து, அதற்கேற்றவகையில் தீர்வுகளைத் தேடியிருந்தால், இந்த அரசாங்கத்தின் மீதான விமர்சனங்கள் குறைந்திருக்கும், விமர்சிப்போரை விரட்டிவிட்டு, தனித்துநின்று பயணிப்பது கூட்டுப்பொறுப்புக்கு எதிர்மறையானது. ஆகையால், விமர்சனங்களுக்கு செவிசாய்க்காது விடின், பாதை பிழைத்துவிடும் என்பதை நினைவில் கொண்டு தீர்மானங்களை எடுக்கவேண்டிய பொறுப்பு, ஆட்சியாளரின் கைகளிலேயே உள்ளது என்பதை நினைவூட்டுகின்றோம்.

## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk
www.tamilmirror.lk






## வாழ்வியல் தரிசனம்

அமைதியான இராட்சதர்கள் வாழும் பூமி இது. இவர்கள் திறமை மிகு நடிகர்கள். தேனொழுகப் பேசி, மற்றவர்களைக் கவிழ்த்துவிடுவதில் மகாசூரர்கள். இவர்களிடம் எப்பொழுதும் சாதாரணமானவர்கள் எச்சரிக்கையுடனேயே இருக்க வேண்டும். இத்தகையவர்களிடம் எவரும் தங்களின் தந்தரங்கங்களைச் சொன்னால், சொல்ல முடியாத பிரச்சினைகளை உருவாக்கி விடுவார்கள்.

எவருக்குமே எந்த ஒரு நல்ல காரியங்களையும் செய்யாத இத்தகையவர்கள், வேண்டாத விருந்தாளிகளாகப் பொது விடயங்களில் உள்நுழைந்து யாவற்றையும் குழப்பி, தாம் திருப்திப்பட்டுக் கொள்வார்கள்.

சுயநலமும் கொடூரபுத்தியும் இணைந்தால் எவருமே நல் இயல்புகளை உருவாக்க முடியாது. மகிழ்ச்சியை உருவாக்குவதை விடுத்து, காழ்ப்புடன் நடமாடுபவர்கள் இறுதிக் காலத்தில், நிம்மதியின்றித் தனித்துவிடப்படுவார்கள்.

வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் அப்பாவி மக்கள், ஏமாற்றும் எத்தர்களிடம் சிக்குண்டுவிடுவது சாதாரணமாகி விட்டது. எவர் பற்றியும் ஆராயாமல், கால அவகாசமின்றி முடிவெடுப்பதும் ஆபத்தானது.

அறியாமையை அறுப்பதும் தெளிவைத் தேடுவதும் உத்தமம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மலையக மக்களின் பிரஜாவுரிமையும் பிரேமதாஸவும்



எம்.எஸ்.எம். ஐயூப்

வரலாற்றில் நடைபெறும் அனைத்தையும் மக்கள் ஞாபகத்தில் வைத்திருப்பதில்லை. பெரும்பாலான விடயங்களை, பெரும்பாலானவர்கள் மறந்துவிடுகிறார்கள். இதனால், அரசியல்வாதிகள் மக்கள் முன் வந்து, நடந்ததை நடக்கவில்லை என்றும் நடக்காததை நடந்தது என்றும் கூறி அரசியல் இலாபம் அடைய முடிகிறது.

சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக வேண்டும் என்ற சட்டம், முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் காலத்திலேயே நிறைவேற்றப்பட்டது. இதனை வைத்து, பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய தேசிய கட்சிக்காரர்கள், “ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியே இனப்பிரச்சினைக்கான அத்திவாரத்தை இட்டது” என்று குற்றஞ்சாட்டுவார்கள். ஆனால், ஐ.தே.கவுக்கு அவ்வாறு குற்றஞ்சாட்ட தார்மிக உரிமை இல்லை.

1954ஆம் ஆண்டு, வடபகுதி விஜயத்தின் போது, அப்போதைய ஐ.தே.கவின் தலைவர் சேர் ஜோன் கொத்தலாவல, கொக்குவிலில் நடைபெற்ற கூட்டமொன்றில், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரசகரும மொழிகளாக்கப்படும் எனக் கூறியிருந்தார். ஆனால், தெற்கில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதையும் ஸ்ரீ ல.சு.க சிங்கள மொழியை மட்டும் அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்துவோம் என்று கூறி வந்ததையும் அடுத்து, ஐ.தே.க தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது.

அதன்படி, 1956ஆம் ஆண்டு தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர், களனியில் நடைபெற்ற ஐ.தே.க மாநாட்டின் போது, சிங்கள மொழி மட்டுமே அரச கரும மொழியாக வேண்டும் என்ற பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அதனை மக்கள் மறந்துவிட்டார்கள்.

இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு, தமது தந்தையான ரணசிங்க பிரேமதாஸவே பிரஜாவுரிமையை வழங்கியதாக, சஜித் பிரேமதாஸ, நுவரெலியாவில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டமொன்றில் உரையாற்றும் போது கூறியிருந்தார். இதுவும் வரலாற்றைத் திரிபுபடுத்தும் கருத்தாகவே தெரிகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது, 2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதியதொரு கட்சியாகும். அதற்கு முன்னர் அக்கட்சியின் தலைவர்களும் ஆதரவாளர்களும் ஐ.தே.கவிலேயே இருந்தார்கள். எனவே, 2020ஆம் ஆண்டுக்கு முன்னர், ஐ.தே.க செய்த நன்மையான காரியங்களின் பெருமையிலும் செய்த கொடுமைகளின் அபகீர்த்தியிலும் ஒரு பங்கு ஐக்கிய மக்கள் சக்தியையும் சென்றடைகின்றது.

இந்தவகையில், ஐ.தே.கவின் வரலாற்றில் நடைபெற்ற சில விடயங்களுக்கு, ஐக்கிய மக்கள் சக்தியும் வெட்கப்பட வேண்டும். அதில், 1948 ஆம் ஆண்டு மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையைப் பறித்தமை, மிகவும் முக்கியமான கொடுமையாகும்.

1947ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கை - இந்திய காங்கிரஸின் ஏழு பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்கள் ஆளும் கட்சியை அல்லாது, பிரதான எதிர்க்கட்சியான லங்கா சமசமாஜ கட்சியையே ஆதரித்தனர்.

இதைத் தமது அரசியல் எதிர்க்காலத்துக்கான ஓர் அச்சுறுத்தலாகவே, டி.எஸ் சேனாநாயக்கவின் தலைமையிலான ஐ.தே.க கருதியது. எனவேதான், 1948 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமை சட்டத்தின் மூலம், மலையக மக்களின் பிரஜாவுரிமையை ஐ.தே.க அரசாங்கம் இரத்துச் செய்தது. இதற்கு, ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவளித்தது.

இது இன்று வரை, இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை, வெகுவாகப் பாதித்து வந்துள்ளது. அக்காலத்தில் நாட்டின் வருமானத்தில் பெரும்பகுதியைச் சம்பாதித்துக் கொடுத்த அம்மக்களுக்கு, இந்தப் பிரஜாவுரிமைப் பிரச்சினையால், திறைசேரிப் பணத்தில் பாடசாலைகளையோ மருத்துவமனைகளையோ பெற்றுக் கொள்ள முடியாமல் போய் விட்டது.

இந்த விடயத்தில், அவர்களுக்கு சில சட்டச் சிக்கல்களும் இருந்தன. அதன் காரணமாக, சுதந்திரத்துக்குப் பின்னரும் அவர்கள் நாட்டில் மிகவும் ஒதுக்கப்பட்ட மக்களாக வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு, வீடமைப்பு என்று எதை எடுத்தாலும் உரிமைகளற்ற, தோட்டக் கம்பனிகளால் ஒடுக்கப்பட்ட மிகவும் பின்தங்கிய மக்களாகவே அவர்கள் சுதந்திரத்துக்குப் பின்னரும் வாழ்ந்து வந்துள்ளனர். ஏனெனில், சுதந்திரத்துக்குப் பின்னரும் பல தசாப்தங்களாக அவர்கள் இலங்கைப் பிரஜைகளாக இருக்கவில்லை.

பின்னர், இடம்பெற்ற பல்வேறு அரசியல் நெருக்குதல்கள் காரணமாக, நான்கு கட்டங்களில் சட்டங்கள் இயற்றப்பட்டு, இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

1964ஆம் ஆண்டு இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கும் இந்திய பிரதமர் லால் பஹதூர் சாஸ்திரிக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி 1967ஆம் ஆண்டு இல. 14க் கொண்ட ‘இந்திய-இலங்கை ஒப்பந்தம் (நிறைவேற்றல்) சட்டம்’ நிறைவேற்றப்பட்டமை அதன் முதல் கட்டமாகும்.

1974ஆம் ஆண்டு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்வுக்கும் இந்திய பிரதமர் இந்திரா காந்திக்கும் இடையில் ஏற்பட்ட மற்றுமோர் ஒப்பந்தத்தின் படி, மேலும் ஒருசாரார் இலங்கை பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொண்டனர். இந்த இரண்டு ஒப்பந்தங்களும் ஸ்ரீ ல.சு.க ஆட்சிக் காலத்திலேயே கைச்சாத்திடப்பட்டன.

பிரஜாவுரிமை விடயத்தில் இந்தியா மீதும் அதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் மீதும், மலையக அமைப்புகள் ஏற்படுத்திய நெருக்குவாரத்தைப் பார்க்கிலும், கடுமையான நெருக்குவாரத்தை வட பகுதியைச் சேர்ந்த தமிழ் ஆயுதக்குழுக்கள் பிற்காலத்தில் ஏற்படுத்தின.

1980களில் இந்தியாவுக்கு எதிரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை காரணமாக, இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இந்தியா நினைத்தது. அதற்கு, இந்திரா காந்தி இலங்கையின் இனப் பிரச்சினையை பாவித்தார். அதன் ஓர் அம்சமாகவே இந்தியா 1985ஆம் ஆண்டு திம்புப் பேச்சுவார்த்தையை ஏற்பாடு செய்தது.

அதில் கலந்து கொண்ட தமிழ் கட்சிகளும் இயக்கங்களும், நான்கு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தனர். அவை இன்றும் திம்புக் கோட்பாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. இலங்கையில் வாழும் சகல தமிழர்களினதும் பிரஜாவுரிமை மற்றும் மனித உரிமைகள் அங்கிகரிக்கப்பட வேண்டும் என்பது அவற்றில் நான்காவது கோட்பாடாகும்.

அக்காலத்தில் ஈ.பி.ஆர்.எல்எப் போன்ற தமிழ் அமைப்புகள் மலையக தமிழர்களையும் தமது போராட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தன. அதன்படியே இந்தக் கோட்பாடு மற்றவையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

அதனை அடுத்து, இந்தியா இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தி வந்தது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் அக்காலத்தில் பிரஜாவுரிமை விடயத்தில் குரல் கொடுத்தது. இந்த நிலையிலேயே கடும்போக்குவாதியான ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்தனவால் 1986ஆம் ஆண்டு இல. 5க் கொண்ட ‘நாடற்ற நபர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்’ நிறைவேற்றப்பட்டது. இது இந்திய வம்சாவளி நபர்களுக்கு பிரஜாவுரிமை வழங்க நிறைவேற்றப்பட்ட இரண்டாவது சட்டமாகும்.

இதனை நிறைவேற்றும் போது எழுந்த சில பிரச்சினைகள் காரணமாக, 1988ஆம் ஆண்டு இல. 39க் கொண்ட ‘நாடற்ற நபர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டம், நிறைவேற்றப்பட்டது. அது மூன்றாவது சட்டமாகும்.

இந்த இறுதி இரண்டு சட்டங்களும் ஜே.ஆர். ஜயவர்தனவின் ஐ.தே.க அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்டங்களாகும். அப்போது ரணசிங்க பிரேமதாஸ பிரதமராக இருந்தமை உண்மையாயினும் அவரது முயற்சியால் அவை கொண்டுவரப்படவில்லை. ஆனால் அவை அக்காலத்திலேயே நிறைவேற்றப்பட இந்திய நெருக்குதலே காரணமாகியது. ரணசிங்க பிரேமதாஸ அதற்காக விசேடமாக எதனையும் செய்தாரா என்று வரலாற்றை புறட்டிப் பார்க்கும் போது தெரிவதில்லை.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த 2003ஆம் ஆண்டு மீண்டும் இந்த விடயத்துக்காக மற்றொரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அது இல. 35க் கொண்ட ‘இந்திய வம்சாவளி நபர்களுக்கு பிரஜா உரிமை வழங்குவதற்கான சட்டம்’ ஆகும். இது இந்த விடயத்துக்காக நிறைவேற்றப்பட்ட நான்காவது சட்டமாகும்.

எனவே மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் விடயத்தில் சஜித் பிரேமதாஸவுக்கு உரிமை கோர ஏதாவது ஒரு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

இதனால், மலையக மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியை புறக்கணிக்க வேண்டும் என்று அர்த்தமாகாது. கடந்த பொதுத் தேர்தலில் பெரும்பாலான மலையக மக்கள், சஜித்தின் கட்சியை ஆதரித்தமை பிழையென்று கூற நாம் முற்படவுமில்லை.

கடுமையாக இனவாதத்தை தூண்டிக் கொண்டு, தேர்தலில் போட்டியிட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைப் புறக்கணித்து, சிறுபான்மை மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்தமை விளங்கிக் கொள்ளக்கூடியதே. ஆனால் வரலாறு திரிபுபடுத்துப்படக் கூடாது.

## கடிதங்கள்

### வைத்தியர்கள் இன்மையால் அசௌகரியங்கள்

கிளிநொச்சி, பளைப் பிரதேச பொது வைத்தியசாலைக்கான போதிய வைத்தியர்கள் இன்மை மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறை காரணமாக, தொடர்ந்தும் அசௌகரியங்களை எதிர் கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அமைந்துள்ள பளை பிரதேச வைத்தியசாலை தொடர்ந்தும் வைத்தியர்கள் பற்றாக்குறையை எதிர் கொண்டு வரும் நிலையில், இங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக, ஏ-09 நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பிரதான வைத்தியசாலைகளின் ஒன்றாகக் காணப்படுகின்ற குறித்த வைத்திய சாலை, வசதி குறைபாடுகளுடன் காணப்படுவதால் வீதி விபத்துகளில் காயமடைந்தவர்களை பளை வைத்தியசாலையில் இருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அல்லது யாழ்ப்பாணம் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லுகின்ற போது, உயிரிழப்பு ஏற்படும் அபாய நிலை காணப்படுகின்றது என்றும் குறித்த வைத்தியசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறு பிரதேச மக்களும் பொது அமைப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளன. இதே வேளை, குறித்த வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட கட்டட வேலைகளும் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையோடு தளபாடங்களும் மருத்துவ வசதிகளும் குறைவாகவே காணப்படுகின்றன.

குறித்த பிரதேச வைத்தியசாலை தற்போதுவரை, ஒரு வைத்தியரை மாத்திரமே கொண்டு இயங்கி வருவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

-யது பாஸ்கரன்

## விவாகரத்தில் முடிந்த கலாட்டா கல்யாணம்





நடிகர் தனுஷும், ஐஸ்வர்யா ரஜினிகாந்தும் பிரிந்துவிட்டதை ரஜினி ரசிகர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அத்துடன், கடந்த 4 மாதங்களில் திரையுலகை சேர்ந்த இரண்டு ஜோடிகள் விவாகரத்து குறித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளமையானது ரசிகர்களை அதிர்ச்சி அடைய வைத்திருக்கிறது.

தனுஷும் ஐஸ்வர்யாவும் காதலித்தார்கள். மகளின் காதலை ஏற்று, அவர் விரும்பிய தனுஷையே திருமணம் செய்து வைத்தார் ரஜினி. தனுஷ், ஐஸ்வர்யா தம்பதிக்கு யாத்ரா, லிங்கா என்று இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். மகன்கள் வளர்ந்துவிட்ட நிலையில் தனுஷும் ஐஸ்வர்யாவும் பிரிந்துவிட்டனர்.

இந்த நிலையில், தனுஷ், ஐஸ்வர்யாவின் விவாகரத்து அறிவிப்பை பார்த்து, சினிமா ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். திரையுலகில் என்ன தான் நடக்கிறது? ஒக்டோபரில் சமந்தா தன் விவாகரத்து குறித்து அறிவித்தார். அந்த அதிர்ச்சியே இன்னும் அடங்கவில்லை. அதற்குள் தனுஷ் வேறு அதிர்ச்சி கொடுத்துவிட்டாரே என்கிறார்கள் ரசிகர்கள்.

16 வயதில் 'துள்ளுவதோ இளமை' திரைப்படத்தின் மூலம் நடிக்க வந்த தனுஷ், 22ஆவது வயதிலேயே திருமணம் செய்து கொண்டார். தன்னை விட வயதில் மூத்தவரான ஐஸ்வர்யாவை காதலித்துத்தான் தனுஷ் திருமணம் செய்து கொண்டார். திருமணத்துக்கு பிறகு பல விடயங்களில் தனுஷ், ரஜினியை போலவே செயற்பட ஆரம்பித்தார். விழாக்களில் கலந்து கொள்ளும் போது வேஷ்டி அணிந்து, மிக அடக்கமாக இருப்பது, பேசுவது என பலவற்றிலும் ரஜினியை போலவே நடந்து கொண்டார். அமெரிக்காவுக்கு ரஜினி சிகிச்சைக்காக சென்ற போது, தனுஷ் தான் உடன் இருந்து அவரைக் கவனித்துக் கொண்டதாக சொல்லப்பட்டது. இதனால் ரஜினியின் வாரிசு என்று கூட, சிலர் தனுஷை சொல்லி வந்தனர்.

ரஜினி, தனுஷ் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படங்களை பார்த்தவர்கள் அவர் சந்தோஷமாக ஒரு குடும்பமாக, ஒற்றுமையாக இருப்பதாக அனைவரும் நினைத்தனர். இதேபோல் தனுஷும் பல மேடைகளில் தனக்கு, தனது மனைவி தான் பக்க பலமாக இருப்பதாக கூறி உள்ளார். இப்படி ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் புகழ்ந்து பேசி வந்தவர்கள், திடீரென விவாகரத்தை அறிவித்திருப்பது ஏன் என புரியாமல் பலர் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இந்தநிலையில் தனுஷின் திருமண மற்றும் குடும்ப புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் தீயாய் பரவி வருகின்றன. தனுஷ் தனது மகன்களுடன் இருக்கும் புகைப்படங்கள், அண்மையில் குடும்பத்துடன் அமெரிக்கா சென்ற போது விருந்து ஒன்றில் மனைவி ஐஸ்வர்யாவை பார்த்து காதல் பொங்க தனுஷ் பாடல் பாடியது, அதற்கு ஐஸ்வர்யா வெட்கப்பட்ட வீடியோ ஆகியவற்றை ஏராளமானோர் பகிர்ந்து வருகின்றனர்.

மேலும் சிலர், அண்மையில் புதுடெல்லியில் நடந்த திரைப்பட விழாவில் தனுஷ் தேசிய விருதையும் ரஜினி தாதாசாகேப் பால்கே விருதையும் பெற்ற பிறகு இருவரும் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படங்களைப் பகிர்ந்து, இந்த இரண்டு ஸ்டார்களும் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்துக்கு அர்த்தம் இல்லாமல் போய் விட்டதே என கவலை தெரிவித்துள்ளனர்.

### தனுஷ்– ஐஸ்வர்யா திருமணம்

தனுஷ்- ஐஸ்வர்யா திருமணம் சர்ச்சையில் ஆரம்பித்தது. ஆனால், சுபமாக யாருமே எதிர்பாராத அளவுக்கு சிறப்பாக நடந்தது. தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, காலையிலேயே வந்து தாலி எடுத்துக்கொடுக்க திருமணம் நடந்தது. மாலையில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கலந்துகொண்டார்.

நடிகர் ரஜினிகாந்தின் மூத்தமகள் ஐஸ்வர்யா திருமணம் திடீரென தனுஷுடன் என முடிவானது. அப்போது சில பிரச்சினைகள் அவரது திருமணம் நடக்குமா என்கிற நிலைக்கு ரஜினி குடும்பத்தை தள்ளியது. அதேநேரம் ரஜினியின் நிலைப்பாட்டிலும் ஐஸ்வர்யா திருமணத்தை வைத்து சில மாற்றங்கள் ஏற்பட்டது.

1991-96 காலக்கட்டத்தில் கடுமையாக ஜெயலலிதாவுடன் மோதலில் ஈடுபட்டிருந்த ரஜினி, 1996 ஆம் ஆண்டு ஜெயலலிதா தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தார். அதனால் ஜெயலலிதா கடும் கோபத்தில் இருந்தார்.

பின்னர், 1998இல் அ.தி.மு.கவுக்கு எதிராகப் பிரசாரம் செய்தார். அதன் பின்னர், ரஜினி குரல் கொடுக்கவில்லை; ஒதுங்கியே ஒருந்தார். 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தார். இம்முறை அவரும் நிதானப்பட்டிருந்தார்.

இந்தக்காலக்கட்டத்தில் ரஜினியும் ஜெயலலிதா எதிர்ப்பைக் கைவிட்டிருந்தார். ஜெயலலிதாவுக்கு நடந்த பாராட்டு விழாவில் 'தைரிய லட்சுமி' என வாழ்த்தியிருந்தார். இந்நிலையில் தனுஷ்-ஐஸ்வர்யா திருமண ஏற்பாடுகள் நடந்தன.

சசிகலா மூலம் ரஜினிகாந்த், ஜெயலலிதாவை சந்திக்க நேரம் கேட்க, அவரும் இறங்கி வந்து நட்புக்கரம் நீட்டினார். தனது மகள் திருமணத்துக்கு ரஜினி அழைப்பு விடுத்தார். இதன்மூலம் ரஜினி - ஜெயலலிதா மோதல் முடிவுக்கு வந்தது. ஜெயலலிதாவை தனது குடும்பத்தின் மூத்த உறுப்பினர்போல் முகூர்த்தத்துக்கு ரஜினி அழைக்க, அவர் வந்து திருமணத்தாலியை எடுத்துக்கொடுக்க தனுஷ் தாலி கட்டினார்.

18 ஆண்டுகள் திருமண வாழ்க்கையில் இரண்டு பிள்ளைகள் இருவருக்கும் உள்ளனர். இந்நிலையில் இருவரும் பிரிவதாக அறிவுத்துள்ளமையானது, ரஜினி குடும்பத்தார் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே, சௌந்தர்யாவும் மணவிலக்கு பெற்று, பின்னர் மறுமணம் செய்திருந்தார்.

விவாகரத்து என்பது யாராக இருந்தாலும் கடினம் தான். அப்படி இருக்கும்போது திரையுலகினரால் மட்டும் எப்படி சட்டென்று பிரிய முடிகிறது என்கிறார்கள் ரசிகர்கள்.

இந்த நிலையில், பிரபல இயக்குநரான ராம் கோபால் வர்மா இதைப்பற்றி கருத்து தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது, "பிரபல நட்சத்திரங்களின் அதிகரித்துவரும் விவாகரத்து, இன்றைய இளைஞர்களுக்கு திருமணத்தில் இருக்கும் பிரச்சினைகளையும் ஆபத்தையும் எடுத்துரைப்பதாக உள்ளது" என குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் தனுஷின் விவாகரத்து அறிவிப்புக்குப் பின்னர், ஐஸ்வர்யாவின் சகோதரி சௌந்தர்யா, தனது சமூக வலைதளத்தின் புகைப்படத்தில், தானும் தனது சகோதரி ஐஸ்வர்யாவும் சிறுமிகளாக இருந்தபோது தங்கள் தந்தை ரஜினிகாந்த் தங்களைக் கைகளில் தூக்கி வைத்திருப்பது போன்ற புகைப்படத்தை பதிவு செய்துள்ளார்.

இந்தப் புகைப்படத்தில் மறைமுகமாக பல விஷயங்களை சுட்டிக் காட்டுவதாக நெட்டிசன்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

யூடியூப்பில், திரை பிரபலங்கள் பற்றி கிசுகிசு சொன்ன பல்வான் ரங்கநாதன், அண்மையில் தனுஷ் பற்றியும் கூறினார். தனுஷ் மற்றும் ஐஸ்வர்யா இடையே காதல் இருப்பதாக கிசுகிசுக்கள் வந்ததால், வேறு வழியில்லாமல் அவர்களுக்கு திருமணம் செய்து வைத்ததாக ரஜினியே தன்னிடம் கூறியதாக கூறினார்.

அதோடு 16 வருடங்கள் அவர்களின் திருமண வாழ்க்கை, நன்றாகச் சென்றதாக ஒரு 'க்' வைத்துப் பேசினார். விருப்பம் இல்லாமல் தான் இவர்களின் திருமணம் நடைபெற்றதாக இதனால் பலர் பேசினர். இது கூட விவாகரத்துக்கு காரணமாக இருக்கலாம். பல ஆண்டுகளாக இருந்த மனகசப்பு இன்று விரிசலாகி உள்ளதாக கூறி வருகின்றனர்.

ஆனால், இது காரணமல்ல. அவர்கள் இருவரும் திருமணமாகி 16 ஆண்டுகள் சந்தோஷமாக வாழ்ந்ததாகவும், அண்மையில் தான் இருவருக்கும் இடையே பிளவு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தங்கமகன் திரைப்படத்துக்கு பிறகு சமந்தாவுடன், தனுஷ் நெருக்கம் காட்டி வருவதாகவும், அதனால் ஐஸ்வர்யா - தனுஷ் இடையே மனக்கசப்பு உருவாகியதாகவும் கூறப்படுகிறது. சமந்தா - நாகசைதன்யா விவாகரத்து சமயத்திலும் அதன் பின்னணியில் தனுஷ் இருந்ததாகச் சில தகவல்கள் கிசுகிசுக்கப்பட்டன.

அதோடு அண்மையில் ரஜினியின் இளைய மகள் சௌந்தர்யா, நடிகர் சிம்புவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டதற்கு வாழ்த்து கூறி இருந்தார். ஏற்கனவே சிம்புவும், ரஜினியின் மகளும் காதலித்து வந்ததாக ஒரு வதந்தி பரவியது.

சிம்புவுடனான காதல் முறிந்த பிறகு தான் ஐஸ்வர்யா, தனுஷ் திருமணம் நடைபெற்றதாகவும், ரஜினி மகளை திருமணம் செய்ய போகிறார் என்ற காரணத்தால் தான் ஆரம்பத்தில் சிம்பு, லிட்டில் சூப்பர் ஸ்டார் என அழைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த விவகாரம் அண்மையில் மீண்டும் விஸ்வரூபம் எடுத்தது தான் தற்போதைய விவாகரத்து முடிவுக்கு காரணம் என கூறப்படுகிறது.

அதே சமயம் இவர்களின் விவாகரத்திற்கு மற்றொரு புதிய காரணமும் கூறப்படுகிறது. ரஜினியின் வற்புறுத்தலின் பேரில் தான் போயஸ் கார்டனில் தனுஷ், பிரம்மாண்ட வீட்டை கட்டி வருகிறாராம்.

இதனால் கடன் பிரச்சனையில் தனுஷ் சிக்கியதாகவும், அந்த சமயத்தில் உதவால் ரஜினி கை விரித்து விட்டதாகவும், அதனால் மனவருத்தம் மற்றும் விரக்தியில் இருந்த தனுஷ், கடன் பிரச்சனையை சமாளிக்க ஒரே நேரத்தில் பல திரைப்படங்களில் நடித்து வருவதாகவும் கூறப்படுகிறது. இந்த பிரச்சனையும் அவர்களின் விவாகரத்துக்கு காரணம் என கூறுகிறார்கள்.

புதுடெல்லி

குடியரசு தின விழா:

## புதுடெல்லியில் பலத்த பாதுகாப்பு

இந்தியா முழுவதும் எதிர்வரும் 26ஆம் திகதி குடியரசு தின விழா கோலாகலமாக நடைபெற இருக்கிறது.

தலைநகர் புதுடெல்லியில் குடியரசு தின விழாவையொட்டி முப்படைகளின் அணிவகுப்பு உட்பட சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் புதுடெல்லி மாநிலம் முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மேலும் மாநிலத்தில் ஏதும் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் இருக்க பாதுகாப்புப்படை வீரர்கள், பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் காஜிப்பூர் மலர் சந்தையில் வெடிபொருள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, புதுடெல்லியில் பல அடுக்கு பாதுகாப்பு, முக அடையாளம் காணும் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.





இது தொடர்பாக புதுடெல்லி பொலிஸ் அதிகாரி தீபக் யாதவ் தெரிவித்துள்ளதாவது:

"பயங்கரவாத அச்சுறுத்தல் தவிர, கொரோனா பரவலும் பாதுகாப்பில் ஈடுபட்டு வரும் படையினருக்கு பெரும் சவாலாக உள்ளது. புதுடெல்லி பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள ஹோட்டல்களிலும் தங்கியிருப்பவர்கள், பார்வையாளர்களை சரிபார்க்கும் செயல்முறையை நாங்கள் தீவிரப் படுத்தியுள்ளோம். ஒரு ட்ரோன் எதிர்ப்புக் குழுவும் நிறுவப்பட்டுள்ளது" என்றார்.

பாதுகாப்பு வலயத்தை மீறும் எந்தவொரு பறக்கும் பொருளும் கண்காணிக்கப்படும். ராஜபாதை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 300 கண்காணிப்பு கமெராக்கள் நிறுவப்பட்டுள்ளன. 50,000 சந்தேகத்திற்குரிய குற்றவாளிகள் குறித்த விவரங்கள் இந்தச் சாதனங்களில் இடம் பெற்றுள்ளன. கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக அணிவகுப்பை பார்வையிட 4,000 டிக்கெட்டுகள் மட்டுமே வழங்கப்படுகிறது" என்றார்.

பெங்களூரு

## அலங்கார ஊர்திக்கு அனுமதி

குடியரசு தினவிழாவில் கர்நாடக அலங்கார ஊர்திக்கு மத்திய அரசு 13ஆவது முறையாக அனுமதி வழங்கியிருப்பதாக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் நடைபெறும் குடியரசு தின விழாவில் பிரமாண்ட அணிவகுப்பு நடைபெறுவது வழக்கம். இதில், பல்வேறு மாநிலங்களின் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடைபெறும். தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களின் அலங்கார ஊர்திக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆனால், கர்நாடக மாநிலத்தின் அலங்கார ஊர்திக்கு மத்திய அரசு அனுமதி வழங்கி இருக்கிறது.



சிக்கமகளூரு:

## ஊரடங்கை மீறி நடந்த சின்னத்திரை படப்பிடிப்பு



வார இறுதி ஊரடங்கை மீறி சிக்கமகளூருவில் உள்ள ஹோட்டலில், சின்னத்திரை தொடர் படப்பிடிப்பு நடந்தது. இதனால் ஹோட்டல் நிர்வாகத்தினருக்கும் படக்குழுவினருக்கும் பொலிஸார் அபராதம் விதித்தனர்.

கர்நாடகத்தில் கொரோனா 3ஆவது அலை வேகமாகப் பரவி வருகிறது. இதனால் கொரோனா பரவலை கட்டுப்படுத்த மாநில அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

வார இறுதி ஊரடங்கில் அத்தியாவசிய பொருள் விற்பனை கடையை தவிர மற்ற கடைகள் திறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதேபோல், சினிமா படப்பிடிப்பு, சின்னத்திரை தொடர் படப்பிடிப்புகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போபால்:

## மாந்திரீகத்தால் இறந்ததாக சந்தேகம்; மாமா, அத்தையை கொன்று தீவைத்து எரிப்பு

மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூர் மாவட்டம் சஹ்ராய் கிராமத்தை சேர்ந்தவர் தயராம் குலஸ்ட் (27). இவரது சகோதரர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தன்னுயிரை மாய்த்துக்கொண்டார்.

இதற்கிடையில், தனது சகோதரனின் தற்கொலைக்கு தனது மாமா - அத்தை உறவு முறையான சுமர் சிங் குலஸ்ட் (60) அவரது மனைவி ஷியாபாய் (55) ஆகிய இருவருமே காரணம் என தயராம் நினைத்துள்ளார்.

மாந்திரீக வேலைகளில் ஈடுபடும் மாமா, அத்தை ஆகிய இருவரும் செய்த மாந்திரீகத்தால்தான், தனது சகோதரன் தற்கொலை செய்துள்ளாரென தயராம் கருதியுள்ளார்.



இந்நிலையில், தனது மாமாவின் வீட்டிற்கு சென்ற தயராம் அங்கிருந்த அவ்விருவரையும் கூர்மையான ஆயுதங்களை கொண்டு தாக்கியுள்ளார். இதில், அவ்விருவரும் இரத்த வெள்ளத்தில் சரிந்து பரிதாபமாக உயிரிழந்தனர். இதனை தொடர்ந்து தான் செய்த இரட்டை கொலையை மறைக்க வீட்டிற்கு தீவைத்துவிட்டு அதனால் இருவரும் உடல்கருகி உயிரிழந்தது போன்று சதி செய்துள்ளார்.

அங்கிருந்து இரண்டு சடலங்களையும் கைப்பற்றிய பொலிஸார், பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். அதில், கணவன் மனைவி இருவரும் கொலை செய்யப்பட்டது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து விசாரணையை தீவிரப்படுத்திய பொலிஸார், ஹினொடியா என்ற கிராமத்தில் பதுங்கி இருந்த தயராம் குலஸ்டை கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டுள்ளார். அதனையடுத்து கைதுசெய்யப்பட்ட தயராம், சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

போபால்:

## கொரோனா கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 39 சதவீதமாக அதிகரிப்பு

கொரோனா காலத்தில் இந்தியாவில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 39 சதவீதமாக உயர்ந்து 142ஆக அதிகரித்துள்ளது. அதேசமயம் ஏழைகளின் எண்ணிக்கையும் இரு மடங்காக உயர்ந்துள்ளதென தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்கொட்லாந்தில் உள்ள டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார மாநாடு நேற்று முன்தினம் (17) ஆரம்பமானது. இந்த மாநாட்டில் இந்தியாவில் அதிகரித்து வரும் சமத்துவமற்ற சமூகம் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனா காலத்தில் இந்தியாவில் கோடீஸ்வரர்கள் எண்ணிக்கை 39 சதவீதம் உயர்ந்து 142ஆக அதிகரித்துள்ளது. அதேசமயம் ஏழைகளின் எண்ணிக்கையும் இரு மடங்காக உயர்ந்துள்ளது.



ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்;

# 26 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து நிகழ்ந்த இரண்டு நிலநடுக்கங்களால் ஏற்பட்ட கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது.

அந்நாட்டின் மேல் மாகாணமான பட்கிஸ்சில் நேற்று முன்தினம் (17) நண்பகல் 2 மணி மற்றும் மாலை 4 மணியளவில் இந் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், இது ரிச்டர் அளவு கோலில் அதிகபட்சமாக 5.3 ஆகப் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெறுவதால் உயிரிழப்பு அதிகரிக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





சீனா

5 ஆவது ஆண்டாகவும்

## சரிந்த பிறப்பு வீதம்

சீனாவில் குழந்தைகள் பிறப்பு விகிதம் தொடர்ந்து 5-ஆவது ஆண்டாகவும் சரிவைச் சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் சீனாவின் மக்கள்தொகை 141.26 கோடியாக அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டில் அந்த எண்ணிக்கை 141.20 கோடியாக இருந்தது. நாட்டின் மக்கள்தொகை கடந்த ஆண்டில் 4.8 இலட்சம் மட்டுமே அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் குழந்தை பிறப்புகளின் எண்ணிக்கை 1.06 கோடியாக இருந்தது. இது, முந்தைய 2020ஆம் ஆண்டில் 1.2 கோடியாக இருந்தது. அந்த வகையில், நாட்டின் பிறப்பு விகிதம் தொடர்ந்து 5-ஆவது ஆண்டாக சரிவைக் கண்டுள்ளது எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

சீனா

ஒமிக்ரான் பரவலுக்கு

## வெளிநாடுகளே காரணம்

### சீனா குற்றச்சாட்டு

சீனாவில் நாட்டில் ஒமிக்ரான் தொற்றுப் பரவலுக்கு வெளிநாடுகளில் இருந்து வந்த தபால்களே காரணம் என சீனா குற்றம் சாட்டியுள்ளது.



சீனாவில் அடுத்த மாதம் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில் கனடாவில் இருந்து அமெரிக்கா, ஹொங்கொங் வழியாக பெய்ஜிங்கிற்கு அனுப்பப்பட்ட சர்வதேச தபால் ஒன்றில் ஒமிக்ரான் வைரஸ் இருந்தாக சீனா தெரிவித்துள்ளது.

இதற்காக சர்வதேச தபால் உறைகளில் மாதிரிகளைச் சேகரித்துள்ளதாகவும், மேலும் அந்த உறைகளில் நடத்தப்பட்ட நியூக்ளிக் அமில சோதனையிலும் ஒமிக்ரான் தொற்று உறுதியானதாகச் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

பிரதமர் பதவியை இழக்கும்

## போரிஸ் ஜோன்சன்?



விருந்தொன்றில் கலந்து கொண்ட காரணத்திற்காக பிரித்தானியாவின் பிரதமர் போரிஸ் ஜோன்சன் தனது பிரதமர் பதவியை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் பிரித்தானியாவும் ஒன்று. குறிப்பாக கடந்த வருடம் அந்நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து காணப்பட்டது.

இக்காலகட்டத்தில் பிரதமர் போரிஸ் விருந்துபசார நிகழ்வொன்றில் கலந்துகொண்டதாக அவரது முன்னாள் ஆலோசகர் வெளியிட்ட தகவலானது அந்நாட்டில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியிருந்து.

இதனையடுத்து நாடாளுமன்றத்தில் இந்த விவகாரம் பேசப்பட்டபோது, "மக்களுக்கு போரிஸ் ஜோன்சன் துரோகம் செய்துவிட்டார். விருந்தில் கலந்த சம்பவத்தை பல மாதங்களாக மக்களுக்கு தெரியப்படுத்தாமல் மறைத்துள்ளார். அவர் இராஜினாமா செய்ய வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பின்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எனினும் குறித்த விருந்துபசார நிகழ்ச்சியை அடுத்து தன் மீதான குற்றச்சாட்டுக்கு போரிஸ் விளக்கம் அளித்துள்ள போதும் அவரது விளக்கம் ஏற்றுக்கொ ள்ளப்படவில்லை.

இந்நிலையில் பிரித்தானியாவின் அடுத்த பிரதமராக வரும் வாய்ப்பு இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனாக்கிற்கு கிடைக்கும் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

41 வயதாகும் ரிஷி சுனாக், பிரிட்டனின் நிதியமைச்சராக பொறுப்பில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

68 கோடிக்கு ஏலத்தில்

## காகிதம்

அமெரிக்காவில் கொமிக் புத்தகமொன்றின் ஒரு பக்கமானது இலங்கை மதிப்பில் 68 கோடி ரூபாய்க்கு (3.36 மில்லியன் அமெரிக்க டொலர்) ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுளளது.

அந்நாட்டில் மிகவும் பழைமை வாய்ந்த கொமிக் புத்தகங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இப் புத்தகத்தில், ஸ்பைடர்-மேனின் படம் அச்சிடப்பட்ட பக்கமே இவ்வாறு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அபுதாபி

அபுதாபி ட்ரோன் தாக்குதல்

## ஐ.நா கண்டனம்

ஐக்கிய அரபு அமீரகத் தலைநகரான அபுதாபியில் ஆளில்லா டிரோன் விமானம் மூலம் நிகழ்த்தப்பட்ட வான்வழித் தாக்குதலுக்கு ஐ.நா சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் (17) அபுதாபி சர்வதேச விமான நிலையம் அருகே உள்ள எண்ணெய் நிறுவனத்தின் முன் நிறுத்தப்பட்டிருந்த எரிபொருள் நிரப்பப்பட்ட கனரக வாகனங்களைக் குறிவைத்து தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டதில், அவை வெடித்துச் சிதறின. இத்தாக்குதலில் 2 இந்தியர்கள் மற்றும் ஒரு பாகிஸ்தானியர் உயிரிழந்த நிலையில், 6 பேர் படுகாயமடைந்தனர். இத் தாக்குதலுக்கு ஹவுதி கிளர்ச்சி அமைப்பு பொறுப்பேற்றுள்ள நிலையில் இச்சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள ஐ.நா பொதுச்செயலாளர் அண்டோனியா குட்டரெஸ், அனைத்து தரப்பினரும் அதிகபட்ச கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணம்:

# அவுஸ்திரேலியாவை வீழ்த்திய இலங்கை



மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில், செனு. கிட்ஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

அவுஸ்திரேலியா: 175/10 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: கம்பெல் கெல்லாவே 54 (77), வில்லியம் சல்ஸ்மன் 22 (50), நிவேதன் ராதாகிருஷ்ணன் 21 (36), இஸக் ஹிக்கிங்ஸ் 15 (38), ஜோஷுவா கார்னல் 12 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: டுனித் வெல்லலகே 5/28 [10], ட்ரவீன் மத்தியூ 2/32 [10], மதீஷா பத்திரண 2/34 [8], சதீஷ ராஜபக்ஷ 1/30 [6], ஷெவோன் டானியல் 0/10 [6], சமிந்து விக்ரமசிங்க 0/11 [3], யசிரு றொட்றிகோ 0/18 [5], ரவீன் டீ சில்வா 0/5 [2])

இலங்கை: 177/6 (37 ஓவ. ) (துடுப்பாட்டம்: டுனித் வெல்லலகே 52 (71), அஞ்சல பண்டார 33 (47), ரனுட சோமரத்னே ஆ.இ 32 (35), சமிந்து விக்ரமசிங்கே 19 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: டொம் விட்னி 2/39 [10], ஜோஷுவா கார்னர் 2/21 [4], வில்லியம் சல்ஸ்மன் 1/39 [7], நிவேதன் ராதாகிருஷ்ணன் 1/40 [7], ஹகிரட் பஜ்வா 0/15 [4], கூப்பர் கொன்னொல்லி 0/22 [5])

போட்டியின் நாயகன்: டுனித் வெல்லலகே

இந்தியா எதிர் தென்னாபிரிக்கா:

## இன்று ஆரம்பிக்கிறது ODI தொடர்



இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது பார்ளில் இலங்கை நேரப்படி நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இந்திய அணித்தலைமைப் பதவியை முற்றிலுமாக விராட் கோலி துறந்த பின்னர் அவர் பங்கேற்கும் முதலாவது தொடர் இத்தொடர் என்பதால் அவர் கூடியதாக கவனம் பெறுவார். அழுத்தமில்லாத கோலி ஏற்கெனவே சராசரியாக சிறப்பாக இருக்கும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார் என்பது கவனத்துக்குரியதாக இருக்கும்.

இதேவேளை, இரவிச்சந்திரன் அஷ்வின், ஷீகர் தவானின் பெறுபேறுகள் உற்று நோக்கப்படும் தொடராகவும் இத்தொடர் இருக்கும். ஏனெனில், அஷ்வின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் மீள்வருகை புரிவதோடு மறுபக்கமாக ருத்துராஜ் கைகவாட் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாகச் செயற்படுவது தவானுக்கு அழுத்தத்தை வழங்குகின்றது.

இதுதவிர, வெங்கடேஷ் ஐயரின் சகலதுறைப் பெறுபேறுகளும் அவரது எதிர்காலத்தை தீர்மானிப்பதாக மாறப் போகின்றது.

மறுபக்கமாக இந்தியாவுடன் ஒப்பிடுகையில் பலவீனமாகக் காட்சியளிக்கும் தென்னாபிரிக்காவுக்கு குயின்டன் டி கொக், ஜனமென் மலன், ஏய்டன் மார்க்ரம், டேவிட் மில்லர், றஸி வான் டர் டுஸன் ஆகியோரின் பெறுபேறுகளே சவாலை அளிக்கக் கூடியதாக விளங்கும்.

ஐ.பி.எல்:

## அஹமதாபாத்தில் இணையவுள்ள ஹர்டிக் பாண்டியா

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) அஹமதாபாத்தின் அணியில் இந்தியாவின் சகலதுறைவீரர் ஹர்டிக் பாண்டியா, ஆப்கானிஸ்தானின் சுழற்பந்துவீச்சாளர் ரஷீட் கான், இந்தியாவின் துடுப்பாட்டவீரர் ஷுப்மன் கில் ஆகியோர் இணையவுள்ளனர்.

இதேவேளை, அஹமதாபாத் அணியில் இந்தியாவின் லோகேஷ் ராகுல், அவுஸ்திரேலியாவின் சகலதுறைவீரர் மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், இந்தியாவின் சுழற்பந்துவீச்சாளர் ரவி பிஷ்னோய் ஆகியோர் இணையவுள்ளனர்.



சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின்

## சிறந்த வீரராக லெவன்டோஸ்கி

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் சிறந்த வீரராக, ஜேர்மனியின் புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சின் றொபேர்ட் லெவன்டோஸ்கி நேற்று முன்தினம் தெரிவாகியுள்ளார்.

கடந்த புண்டெலிஸ்கா பருவகாலத்தில் 41 கோல்களைப் பெற்ற 33 வயதான லெவன்டோஸ்கி, பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான லியனல் மெஸ்ஸி, இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான மொஹமட் சாலா ஆகியோரைத் தாண்டியே சிறந்த வீரராகத் தெரிவிவாகியிருந்தார்.



இந்நிலையில், ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவின் மத்தியகள வீராங்கனையான அலெக்ஸியா புடெல்லாஸ்ஸே சிறந்த வீராங்கனையாகத் தெரிவாகியிருந்தார்.

இதேவேளை, இத்தாலிய சர்வதேச கால்பந்தாட்ட அணியின் பயிற்சியாளரான றொபேர்ட்டோ மன்சினி, பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முகாமையாளர் பெப் குவார்டியோலாவைத் தாண்டி, சிறந்த பயிற்சியாளராக இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சியின் முகாமையாளரான தோமஸ் துஷெல் தெரிவானார்.

இந்நிலையில், சிறந்த கோல் காப்பாளராக செல்சியின் எடுவார்ட் மெண்டி தெரிவாகினார். இத்தாலியின் கோல் காப்பாளர் ஜல்லூயிஜி டொன்னருமா, மியூனிச்சின் மனுவல் நோயரைத் தாண்டியே இவ்விருதை மெண்டி வென்றிருந்தார்.

சிறந்த பதினொருவர் அணி பின்வருமாறு,

ஜல்லூயிஜி டொன்னருமா, 2. டேவிட் அலபா, 3. ருபென் டயஸ், 4. லியனார்டோ பொனுச்சி, 5. ஜோர்ஜினியோ, 6. என் கலோ கன்டே, 7. கெவின் டி ப்ரூனே, 8. கிறிஸ்டியானோ றொனால்டோ, 9. எர்லிங் பிறோட் ஹலான்ட், 10. றொபேர்ட் லெவன்டோஸ்கி, 11. லியனல் மெஸ்ஸி.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 19 ஜனவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.